விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

சங்கு 24
ஒலி 230 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை (06.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# 'சங்கமித்தை வரவும் இல்லை அரச மரம் நடவும் இல்லை'

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சுழிபுரத்தில் கவனயீர்ப்பு போராட்டம்




(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மீளப் பெறப்பட வேண்டும் என வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## அக்கராயனில் வீதி விபத்து
### ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி பகுதியில் இருந்து அக்கராயன் நோக்கி பயணித்த கப்ரக வாகனமும் அக்கராயன் பகுதியில் இருந்து கிளி 19

## அரியாலையில் ரயில் விபத்து
### குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை - புங்கன்குளம் பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள் 19

## மின்கட்டணத்தை அதிகரிக்க முடியாது
### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்கட்டணத்தில் அதிகரிப்பை மேற்கொள்ள முடியாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சார சபையினால்கோரிக்கை முன்வைக்கப்படவில்லை 19

### 'பறாளாய் முருகன் ஆலய விவகாரம்'
## சங்கானையில் முன்னணியும் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய விவகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் சங்கானையில் நேற்று எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 19



### பெரும்போகத்தில்
## விவசாயிகளுக்கு இலவச உரம்

(கொழும்பு)

அடுத்த பெரும் போகத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் பண்டி உரம் (MOP) பரிந்துரைக்கப்படும் தொகை முழுவதும் இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 19

### வடக்குக் கிழக்கிலாவது தேர்தலை நடத்துக
## ஜனாதிபதியிடம் வலியுறுத்துமாறு இந்திய உயர்ஸ்தானிகரிடம் கோரினோம்
### மனோ கணேசன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேனும் முதலில் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்துமாறு இந்திய உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித் 19

## வடக்குக்கான 'யாழ் நிலா' சொகுசு ரயில் சேவை ஆரம்பம்

06ஆம் பக்கம் பார்க்க

## கடுமையான வரட்சி காரணமாக யாழில் 69,113 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடுமையான வரட்சிகாரணமாக யாழில் 21,714 குடும்பங்களை சேர்ந்த 69,113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிலவும் வரட்சியான கால நிலை காரணமாக 4 மாகாணங்களில் சுமார் 90,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த 18 பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் 19

### எதிர்வரும் 8ஆம் திகதி
## மண்டைதீவில் விசேட மருத்துவ முகாம்

(மண்டைதீவு)

மண்டைதீவில் நாளை மறுதினம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசேட மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

மண்டைதீவு பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறும் இம்மருத்துவ முகாமில் மருத்துவ 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிவமயம்

# காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம் திருவருள்மிகு பூரண புஷ்கலா சமேத அரிகரபுத்திர ஐயப்ப சுவாமி தேவஸ்தான திவ்யமகோற்சவ விஞ்ஞாபனம் - 2023

காரைநகரில் குளக்கோட்டு மன்னனால் ஏழுநிலைக் கோபுரங் களோடு அமைக்கப்பெற்று ஆதிஷேத்திரமாக விளங்கிய மேற்படி ஆலயத்தின் மகோற்சவப் பெருவிழா இன்று 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று தேவஸ்தான பிரதம குரு ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக்குருக்கள் அவர்கள் தலைமையில் காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பிரதிஷ்டா சிரோன்மணி, சகலாகம பண்டிதரான மேற்படி குருக் களின் தலைமையில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் பின் நடைபெறும் முதலாவது பிரம்மோற்சவம் ஆகும்.

இம் மகோற்சவத்தில் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை சப்பர உற்சவமும் 14.08.2023 இரதோற்சவமும் 15.08.2023 செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை விரத விஷேஷ பூசையைத் தொடர்ந்து சமுத்திரத் தீர்த்தோற்சவமும் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

13.08.2023 சப்பர உற்சவத்தில் குருக்களின் சகல விதமான பணிகளையும் பாராட்டி 'சிவாகம வாஸஸ்பதி' எனும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**அடியார்கள் யாவரும் ஆசாரசீலராக பூசை வழிபாட்டில் கலந்து கொள்வதோடு அபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், இளநீர் போன்ற திரவியங்களை உபகரித்து திருவருள் பெற்றுய்வார்களாக.**

**- தேவஸ்தானத்தினர்**

(C-7017)

## தென்னந்தோட்டம் விற்பனைக்கு

புதிய தென்னை, கயூமரம், மாந்தோப்பு வயல் அடங்கலாக சகல வசதிகளுடன் 13 ஏக்கர் விற்பனைக்கு உண்டு. (16622)

**077 873 0129**

அல்லிப்பளை

## PickMe METER TAXI

நாங்கள் வட மாகாணத்தில் ஆரம்பிக்கிறோம்....!!!

உங்கள் வாகனங்களை இப்போதே பதிவு செய்யுங்கள்....!!!

(முச்சக்கர வண்டி, வேன், கார், மினி லாரி)

சமர்ப்பிக்கவேண்டியை ஆவணங்கள்:-

- வாகன புகைபடம் (முன், உள்பகுதி, கரை பகுதி)
- சாரதி அனுமதிபத்திர் • தேசிய அடையாள அட்டை
- வாகன வரி நகல் • வாகன இன்சூரன்ஸ் நகல்
- சாரதி புகைப்படம்

(16623)

அங்கீகரிக்கப்பட்ட வடக்கு மாகாண விநியோகஸ்தர்

**0774 737 737**



## காணி விற்பனைக்கு

மானிப்பாய் கைதடி வீதியில் உரும்பிராய் சந்திக்கும் கோப்பாய் கிருஸ்ணர் கோவிலிற்கும் இடையில் உரும்பிராய் சந்தியிலிருந்து 1.5Km தூரத்தில் வீதியில் இடது பக்கத்தில் 15 அடி அகலபாதையுடன் கிணற்றுடன் கூடிய 3 ஆவது காணி விற்பனைக்கு உண்டு. (16616)

**077 218 4878**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## வீடு வாடகைக்கு

இல.24 பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கையில் யாழ்ப்பாணம்

வாடகை - 15,000

முற்பணம் - 150,000

தொடர்பு (16618)

**077 236 5351**

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் நகைக்கடை ஒன்றிற்கு A/L படித்த ஆண்கள் வேலைக்கு தேவை.

தொடர்பு (16620)

**077 784 0379**

## கார் விற்பனைக்கு

NP GD இலக்க மாருதி சுசுகி கார் நல்ல நிலையில் உள்ளது உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (16613)

**076 860 4501**

## வேலையாட்கள் தேவை

கடைக் கணக்குகள் எழுதுவதற்கும் Excel தெரிந்தவர்களும் ஆண், பெண் தேவை.

**அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.** (16619)

**077 252 3155**

## மரண அறிவித்தல்

பிறப்பு 1947 . 06 . 18



இறப்பு 2023 . 08 . 04

### கதிரவேலுப்பிள்ளை சிவபாலசுந்தரம்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலுப்பிள்ளை சிவபாலசுந்தரம் அவர்கள் கடந்த (04.08.2023) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - இத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வராசா (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் - கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச, தர்மகார்த்தா பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயம்), தெய்வேந்திரம் (கலா பற்றறி ரேடிங் சென்ரர் - வவுனியா), மகேந்திரராஜா (ஜேர்மனி), கௌசலாதேவி (பிரான்ஸ்), இலங்கேஸ்வரி (இங்கிலாந்து), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), உதயகுமார் (ஹொலண்ட்), சசிகலா (பிரான்ஸ்), ரதிமாலசிங்கா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் தெல்லுக்கலட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

குடும்பத்தினர்

(C-7010)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-

**ஜெயம்**

**077 814 7389**

**077 986 5457**

(16625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய முட்டைகளை
## நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து முட்டைகளையும் நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச வணிக கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் ஒரு மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதாக அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டார்.

எனினும், அந்த முட்டைகளை பேக்கரிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வழங்க முடியாது என அவர் வலியுறுத்தியுள்ளார். லங்கா சதொச ஊடாக தினமும் ஒரு மில்லியன் முட்டைகள் விநியோகிக்கப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அடுத்த வாரத்திற்குள் அனைத்து பல்பொருள் அங்காடிகளுக்கும் பொதி செய்யப்பட்ட முட்டைகளை விநியோகிக்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார். பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் பொதி செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை 42 ரூபா எனவும் அவர் குறிப்பிட்டார். (4)

## உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்க

# கைவிடப்பட்ட 11 ஆயிரம் ஏக்கரில் மீண்டும் விவசாயச் செய்கைகள்

## விவசாய இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

**எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளும் வகையில் கைவிடப்பட்டுள்ள 11,000 ஏக்கர் நெல் வயல்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்தார்.**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக கைவிடப்பட்டுள்ள நெல் வயல்களில் மீண்டும் பயிரிடும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும், இதற்காக அரசாங்கம் 420 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்

கடந்த காலங்களில் எமது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு துறையாக விவசாயம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் படிப்படியாக இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருவதாகவும் அதற்கு நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

“இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

எனவே, ஒரு நாடு என்ற வகையில், இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நாமும் தயாராக வேண்டும். நாட்டின் விவசாயத் துறையை மேம்படுத்துவதை அரசாங்கத்தால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்.

அதன்படி, நாட்டில் கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் சுமார் 11,000 ஏக்கர் வயல் நிலங்களில் பயிரிட எதிர்பார்த்துள்ளதாகவும், கமநல அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருவதோடு, இதற்காக அரசாங்கம் 420 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (4)

# இலங்கையின் கப்பல் துறையை ஊக்குவிக்க பிரான்ஸ் உதவி



(கொழும்பு)

இலங்கையில் கப்பல் போக்குவரத்து துறையை அபிவிருத்தி செய்வதற்கு உதவி வழங்க தயாராக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதியின் நாட்டுக்கான விஜயத்தின் போது, இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பணிப்பிரிவின் பிரதானி சாகல ரத்நாயக்க இது தொடர்பில் ஜனாதிபதி மக்ரோனுக்கு அறிவித்ததையடுத்தே பிரான்ஸ் ஜனாதிபதி இந்த இணக்கத்தை வெளியிட்டுள்ளார்.

கப்பல் துறையில் உலகில் மூன்றாவது இடத்தைப் பிரான்ஸ் பிடித்துக்கொண்டுள்ளதுடன், அந்நாட்டு நிறுவனங்கள் இலங்கைக்கு உதவியை பெற்றுக்கொடுக்கும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி உத்தரவாதமளித்துள்ளா??.

இந்த செயற்பாடுகளை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஊடாக ஒருங்கிணைக்குமாறு பிரான்ஸ் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்

# நீர்க்கட்டண அதிகரிப்பு; பாரிய போராட்டம் வெடிக்கும்

## அநுர எச்சரிக்கை



(கொழும்பு)

நீர்க் கட்டண அதிகரிப்புக்கு எதிராக உடனடியாக மக்கள் அணிதிரளத் தொடங்குவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார அழுத்தம், மருந்து பொருட்கள் தொடர்பான பிரச்சினை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றினால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களை நெருக்கடி நிலைமைக்கு தள்ளுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் மீதான இந்த அனைத்து அழுத்தங்களுக்கும் எதிராக வாழும் உரிமையை கோரி மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்க தயாராக இருப்பதாகவும் கொழும்பு மாவட்ட

# துப்பாக்கி சூடு ஒருவர் காயம்

வெலிவேரிய அம்பறலுவ வீதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் காரில் பயணித்த நபரொருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்களில் வந்த இருவர் காரில் பயணித்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# இலங்கை வரவுள்ளார் சச்சின் டெண்டுல்கர்



(கொழும்பு)

இந்திய கிரிக்கட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுனிசெப் சிறுவர் அமைப்பின் தெற்காசியாவிற்கான பிராந்திய நல்லெண்ண தூதுவராக இவ் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் அமைப்பான யுனிசெஃபின் நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ள அவர் சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கைக்கான தமது விஜயம் தொடர்பான அறிக்கையை அவர் வெளியிடுவார் என தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# இன்று மக்கள் வங்கி திறக்கும்

(கொழும்பு)

இன்றைய தினம் மக்கள் வங்கியின் கிளைகள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தெரிவு செய்யப்பட்ட கிளைகளே திறக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக வங்கிக் கணக்குகளை விரைவாக திறக்குமாறு அரசாங்கத்தால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே அஸ்வெசும திட்டத்திற்கான கணக்குகளை திறப்பதற்காக குறித்த இரு நாட்களும் தெரிவு செய்யப்பட்ட வங்கிக்கிளைகள் திறந்திருக்கும் என்ற அறிவிப்பு மக்கள் வங்கியின் முகப்புத்தக பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 1959 . 11 . 25

இறப்பு 2023 . 08 . 03

## ஜெகசீலன் இராசமலர்

பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகசீலன் இராசமலர் அவர்கள் 03.08.2023 அன்று காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - அசுமதி தம்பதியரின் அன்பு மகளும் ஜெகசீலனின் அன்பு மனைவியும் தாரணியின் அன்புத் தாயும் விஜிதரின் அன்பு மாமியும் உலகநாதன், காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், சச்சிதானந்தம் மற்றும் சர்வகுலநாதன், குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குணசீலன், சத்தியசீலன், காலஞ்சென்ற இந்திராதேவி, சுமத்திராதேவி, வசந்திராதேவி, நித்தியானந்ததேவி, சிவ குமாரி, சறோஜினிதேவி, தாரணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தமிழ்கவி, பிரசாந், சிந்துஜன், சூர்யா, பானுஜா, தயாளசோபன், நிறோஷனா, சாரங்கா, சோசிகா, கௌசிகா, யசிதர், ஜீவன், செந்தில், கார்த்திகா, உமாதேவி, பாமாதேவி, லதாதேவி, இந்திரகுமார், இராசகுமார், கானுஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் யதுன், திவர்ஷி, ஹரிஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (16631)

தகவல்:- குடும்பத்தினர்
077 249 9955, 076 905 7301






# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை பிலிப்
### (சின்ராசா)



மண்ணில் 08.02.1946

விண்ணில் 03.08.2023

குருநகரைப் பிறப்பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிலிப் (சின்ராசா) அவர்கள் 03.08.2023 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிரபு - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பிரான்சிஸ்காவின் (அன்னமலர்) பாசமிகு கணவரும் லக்ஸ்மாலா (ஆசிரியர் - யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.ம.வித்தியாலயம்), பிறியோலா (கனடா), றொபினா றெனோலா (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை), றெக்சலா (ஆசிரியர் - கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்போன்ஸ் (உள்ளூராட்சி அமைச்சு - வடக்கு மாகாணம்), ராஜ்குமார் (கனடா), பெலிக்ஸ், ஜெயக்குமார் (மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெலா, லக்ஷிகன், வலன்ரீனா, அன்றீனா, ஜோயல், தரணிகா, ஜெஷானா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான லில்லி, சேவியர் மற்றும் ஜேம்ஸ், றோஸ், காலஞ்சென்றவரான ஜோசேப் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அலோசியஸ், நவமணி மற்றும் நாகம்மா, காலஞ்சென்ற தவரெட்ணம் மற்றும் ராணி, செபஸ்ரீனா, காலஞ்சென்ற றொபேட் ஆகியோரின் மைத்துனரும் உதயகாந்தராஜா, பிறேமா ஆகியோரின் சகலரும் அலெக்சாண்டர் மற்றும் ராணி, பபி, Dr.திருமாறன், ரதிமதி, Dr.மதிமாறன், Dr.டீன் ஜெனிபேட், டீன் ஒஸ்பேட், சாந்தனா, ஏஞ்சலின் ஆகியோரின் மாமனாரும் ராஜன், காலஞ்சென்றவர்களான நிர்மலா, பாபு மற்றும் கலா, ஜொய்லா, கொன்சி, மேசி, ஜோன்சன், ஜொய்சி, யான்சி, சபினா ஆகியோரின் சிறிய தந்தையும் ரவி, ஜீன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.08.2023) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.50, 3ம் குறுக்குத்தெரு,
பாஷையூர். (16626)

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 09 . 1944

மறைவு 24 . 07 . 2023

## நடராஜா மகேஸ்வரி

யாழ்.தாவடி பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Genova, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகேஸ்வரி அவர்கள் கடந்த 24.07.2023 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகரத்தினம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் நடராஜாவின் அன்பு மனைவியும் பொன்னையா (ஒட்டு மடம்), சபாரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற கமலேஸ்வரி, பாலசுப்ரமணியம் (இணுவில்), தேவராஜா (ஜேர்மனி), சத்தியபாமா (தாவடி), கமலாதேவி (தாவடி), சரஸ்வதி தேவி, சுபத்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மைதிலி (இங்கிலாந்து), மாருதி (கனடா), மாலதி (மாலா - கனடா), குமரதாஸ் (குமரன் - இத்தாலி, இங்கிலாந்து), கெசந்திலி (இங்கிலாந்து), கெஜதாஸ் (கெசந்தன் - இத்தாலி, இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிறஞ்சன் (இங்கிலாந்து), கண்ணதாசன் (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் (கனடா), சாந்தினி (லதா - இங்கிலாந்து), லவீந்திரகுமார் (லவி - இங்கிலாந்து), லிசாலினி (லிசா - இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம், திருஞானசம்பந்தர் மற்றும் தங்கலட்சமி, ஆனந்தரஜனி, காலஞ்சென்ற கனகசிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் பூர்வஜா, அஞ்சனன், கவினன், ஸ்ரீபரன், ஜெயப்பிரியன், ஜெயப்பிரவீன், அர்ச்சனா, அபினன், ஹரினி, அருணி, ஆதீஷன், லதுஷா, ஆதேஸ், லஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
தாவடி. (16628)

தகவல்:- நடராசா பரமேஸ்வரன்
(077 416 8554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் சேவை தரம் மூன்று

# போட்டிப்பரீட்சை, நேர்முக தேர்வு நடத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக புதிய போட்டி பரீட்சைகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றிற்கு புதிய நியமனங்களை வழங்குவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி மன்றாடியர் நாயகம் நிர்மலன் விக்னேஸ்வரன் இந்த விடயத்தை மன்றுரைத்துள்ளார்.

அத்துடன் குறித்த மனுக்கள் தொடர்பில் சமாதான யோசனையை முன்வைக்க முடியும் எனவும் பிரதி மன்றாடியர் நாயகம் தெரிவித்தார்.

இதற்கமைய அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்தி உரிய நியமனங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்து ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் பரீட்சைகளை நடத்த முடியும் எனவும் உரிய விடைத்தாள் மதிப்பீடுகள் செய்யப்பட்ட பின்னர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்குள் நேர்முகத் தேர்வுகளை நடத்த முடியும் எனவும் பிரதி மன்றாடியர் நாயகம் உயர்நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளார். (4)

## புத்தளம் - அநுராதபுரம் வீதியில் யானைகள் நடமாட்டம் அதிகரிப்பு

(புத்தளம்)

புத்தளம் அநுராதபுரம் வீதியின் 6ஆம் கட்டைப் பகுதியில் சுமார் 30 இற்கும் அதிகமான யானைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடமாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியால் செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் வாகனங்களை நிறுத்தி யானைகளை பார்வையிட்டனர். குறித்த காட்டு யானைகள் இரவு நேரத்தில் வீதியைக் கடந்து கிராமங்களுக்குள் வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் குறித்த பகுதியிலுள்ள மக்கள் இரவு வேளைகளில் வெளியில் செல்வதற்கு மிகவும் அச்சத்திற்கு மத்தியில் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (4)


10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1993 . 11 . 05

உதிர்வு 2013 . 07 . 27

அமரர். சண்முகநாதன் பிரசாத்

எங்கள் செல்வமே பிரசாத் இன்றுடன் 10 ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் எங்கள் நெஞ்சங்களில் புன்னகை பூத்த முகத்துடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றாய் நாம் வாழும் வரை நம்முடன் வாழ்ந்து கொண்டு தான் இருப்பாய்

இரவும் பகலும் மாறி மாறி வரும் சூரியனும் சந்திரனும் மாறி மாறி வரும்
ஆனால் உன் நினைவோ மாறாது, மறையாது நாம் வாழும் வரையிலும்
நிச்சயம் ஒரு நாள் உன்னை சந்திப்போம்
ஆண்டவன் காலடியில் அதுவரை உன் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் நினைவுகளுடன்
சிறியதாயார், பெற்றோர், அண்ணன்மார், அண்ணிமார், பெறாமக்கள்.
பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி.

(C-7014)

கண்ணீர் அஞ்சலி



அமரர்.
செல்லத்துரை சோமசுந்தரம்

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி.கி.சிவகுகன் அவர்களின்
அன்புத் தந்தை செ.சோமசுந்தரம் அவர்கள்
காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

தோற்றம் 08.11.1937
மறைவு 04.08.2023

(C-7015)

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
பாடசாலைச்சமூகம் யா/இணுவில் இந்துக்கல்லூரி.


## இராசிபலன்

06.08.2023
ஆடி 21, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 01.36மணிவரை

உத்திரட்டாதி முற்பகல் 09.32 மணிவரை
சுபநேரம்-09.04-10.34 மணிவரை
இராகுகாலம்-4.34-6.04 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம்.

வளவன்

**மேஷம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்,வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**கடகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்,ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல்நலம் சீராகும், மங்கையால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும்.

**துலாம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதை உயரும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள் காரிய அனுகூல முண்டு.

**மகரம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு சிறப்பினை வழங்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு,வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்,பொருளாதார நிலைஉயரவழிவகை செய்வீர்கள்,போசன சுகமுண்டு.

**சிம்மம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், தேகநலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகலாம்,மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றிமறையும்.

**விருச்சிகம்:** இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்

**கும்பம்:** நன்மைகள் நடைபெறும்நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி:** பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும்நாள், உறவினர் வழியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பயணங்களால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்திகாணவேண்டிய நாள், போசன சுகமுண்டு.

கடமை தவறாமல் இருப்பவர்களை யாவரும் நேசிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கிற்கான 'யாழ் நிலா' சொகுசு ரயில் சேவை ஆரம்பம்



வடக்கிற்கான "யாழ் நிலா" சொகுசு ரக சுற்றுலா தொடருந்து சேவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரை இந்த தொடருந்து சேவை இடம்பெறவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இடம் பெற்றது.

இதில் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட தரப்பினர் பங்கேற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, கொழும்பு - கோட்டை தொடருந்து நிலையத்தில் இருந்து இரவு 10 மணியளவில் புறப்படவுள்ள "யாழ் நிலா" தொடருந்து சேவை மறுநாள் அதிகாலை 5.52 அளவில் காங்கேசன் துறை தொடருந்து நிலையத்தை சென்றடையவுள்ளது.

அத்துடன் இரவு 9.30 அளவில் காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கவுள்ள இந்த தொடருந்து மறுநாள் அதிகாலை 5.36 அளவில் கல்கிசை தொடருந்து நிலையத்தை அடையும் என தெரிவிக்கப்படுகிறது. (4)

# வீதி விபத்துக்களை தடுக்க புதிய வேலைத்திட்டங்கள்

## வடக்கு ஆளுநர் தலைமையில் ஆராய்வு

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாணத்தில் வீதி விபத்துக்களைக் குறைத்து வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.**

இதில் கலந்துகொண்ட யாழ் போதனா வைத்தியசாலை எலும்பியல் வைத்திய நிபுணர் கோபிசங்கர் மேல் மாகாணத்துக்கு அடுத்தபடியாக அதிக வீதி விபத்துக்கள் இடம்பெறும் மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுவதாக கூறினார்.

போதியளவு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, வர்த்தக நிலையங்கள் சந்தைப்படுத்தலுக்காக வீதிகளை பயன்படுத்துகின்றமை, முறையற்ற வாகனத்தரிப்பிடங்கள், நடைபாதையற்ற வீதிகள் முதலிய பலவும் இதற்குப் பிரதான காரணமாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவற்றைக் கேட்டறிந்த ஆளுநர், வர்த்தக நிலையங்களுக்கு முன்னே விளம்பரங்கள் செய்ய வீதிகளை பயன்படுத்துதல், வாகனங்களை நிறுத்துதல் முதலியவற்றால் பாதசாரிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், எனவே இவற்றைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

வைத்தியசாலைக்கு வந்து செல்லும் பயணிகளை இலக்காகக் கொண்டே பொதுப் போக்குவரத்து சேவைகள் செயற்படுவதால், யாழ்.போதனா வைத்தியசாலை வீதியை சுற்றி பேருந்துகளின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் ஏற்படும் நெரிசல்களை குறைப்பதற்கு, வைத்தியசாலை வீதியைத் தவிர்த்து மாற்றுப் பாதையூடாக பிரதான வீதிப் போக்குவரத்து மார்க்கத்தை பயன்படுத்த பேருந்துகளை ஊக்குவிப்பதுடன், வைத்தியசாலைக்கு வந்து செல்பவர்களுக்கான குறுகிய போக்குவரத்துச் சேவைக்கான வேறொரு ஏற்பாட்டினை செய்யவேண்டும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் வைத்தியசாலை வீதியின் நடுவில் உள்ள வாகன தரிப்பிடத்திலேயே வாகனங்களை நிறுத்துவதால் அதிக விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உருவாகுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டு, அதை மாற்றி, வைத்தியசாலை வீதியை ஒருவழிப் பாதையாக மாற்றக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

வீதிகளுக்கு நடுவே வாகனத்தரிப்பிடங்கள் இருப்பது மிகவும் பழமையான ஒரு நடைமுறை என்று இங்கு சுட்டிக்காட்டிய ஆளுநர் இனிவரும் காலங்களில் நிலக்கீழ் வாகனத்தரிப்பிட முறைகளுக்கு நாம் செல்ல வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறும் செயற்பாடுகள் எங்கே, எப்படி, எப்போது நடைபெறுகின்றன என்பது தொடர்பில் முழுமையான ஆய்வை மேற்கொண்டு உண்மையான பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு, அதன் பின்னர் வீதிப்பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலம் எவ்வாறு விபத்துக்களை குறைக்கலாம் என்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார். (4-33-104)

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி உப பணிமனைக்கு உட்பட்ட 4இந்து மயானங்களுக்கான பராமரிப்பு அபிவிருத்தி சபைத் தெரிவும்பொதுக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிரதேசசபை செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் கைதடி வடக்கு தச்சன் பிட்டி இந்து மயானத்திற்கான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு கைதடி வடக்கு சனசமூக நிலையத்திலும்,

கைதடி கிழக்கு ஊற்றல் மயானத்திற்கான கலந்துரையாடல் காலை 10.30 மணிக்கு ஊற்றல் இந்து மயான இளைப்பாறு மண்டபத்திலும்,

கைதடி மேற்கு கல்லாகம் இந்து மயானத்திற்கான கலந்துரையாடல் மதியம் 12மணிக்கு கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்திலும்,

கைதடி தெற்கு ஊரியான் இந்து மயானத்திற்கான கலந்துரையாடல் மதியம் 1.30மணிக்கு கைதடி சைவ ஐக்கிய சங்க மண்டபத்திலும் இடம்பெறவிருப்பதால் தமக்குரிய மயான கூட்டத்தில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதேசசபையின் கைதடி உப பணிமனையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.(4-30)

## வரணியில் விபத்து இருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி, கறுக்காய் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து குறித்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)



சிறார்களின் திறன்களை விருத்தி செய்யும் முகமாக வேர்ட்விஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் தென்மராட்சி-உசன் கிராமத்தில் சிறுவர்களின் உற்பத்திப்பொருட் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது.(படம் -சுபேசன்)

## குற்றச் செயல்களைக் குறைக்க விசேட குழு நியமனம்

(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் அதிகரித்துள்ளதாகத் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இவற்றைக் குறைப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் இந்த விசேட குழு நியமிக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார். (4)

நாகபூசனி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 071 999 9306, 077 138 7596

(சி-7016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 409
Viber 076 636 3378



# இந்தியாவின் விருப்பம் நிறைவேறுமா?

"சோறு கேட்டுப் போராடுகிறோம். கிடைத்ததோ பாண். அதற்காய் பாணைத் தூக்கி எறிந்து விடாது அந்தப் பாணை உண்டு அதன் தென்பில் சோற்றிற்கான எமது போராட்டத்தை தொடருவோம்."

இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கான சகல உரிமைகளும் மறுக்கப்படாமல் வழங்கப்பட வேண்டும் என்பதே தற்போதைய பேசுபடு பொருளாக மாறி இருக்கிறது.

சிறுபான்மை இனங்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட அடக்கு முறைகளுக்கு முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும் என விருப்பம் கொண்ட இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்டதே 13 ஆவது திருத்த சட்ட மூலமாகும்.

சிறுபான்மை இனங்கள் தமது பூர்வீக நிலங்களில் ஓரளவு அதிகாரங்களைப் பெற்று வாழக்கூடிய வகையில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் இயற்றப்பட்டிருந்ததும் அதை அப்போதைய இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டதும் யாவரும் அறிந்த விடயமே.

ஆயினும் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தில் இருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்களை சிறுபான்மை இனங்களுக்கு வழங்கினால் அது பெரும்பான்மை இனத்திற்கு ஆபத்தாக அமையும் என கருதிய எதிர் கருத்து அரசியல்வாதிகள் 13 ஆவது திருத்தச் ச்ட்ட மூலத்தை எதிர்த்தனர்.

அத்துடன் பெரும்பான்மையின சிங்களவர் மத்தியிலும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரங்களை வழங்கும் சட்ட மூலமாகும்.இது சிங்கள இனத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் உள்ளது என 13 இற்கு எதிராக பாரிய பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர்.

அதில் அவர்கள் வெற்றியும் கண்டிருந்தனர்.அதன் விளைவு சிங்கள மக்கள் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை சிறுபான்மையினருக்கு வழங்கிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

தமிழினத்தைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் என்பது அவர்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக பிரதி பலிக்காத போதிலும் தற்போதைய சூழ்நிலையில் அது ஒரு தற்காலிக தீர்வாக அமையும் எனக் கருதுகின்றனர்.

காரணம் வடக்கு- கிழக்கை அரசு மிகத் தீவிரமாக ஆக்கிரமித்து வருவதுடன் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்ட வண்ணமே உள்ளது.

13 ஆவது திருத்த சட்ட மூலம் தமிழினத்துக்குக் கிடைத்தால் ஆகக் குறைந்தது தமிழினத்தின் பறிபோகும் நிலங்களாவது மீட்டெடுக்கலாம் என்பதே அதற்கான காரணமாகும்.

13 ஆவது திருத்த சட்ட மூலத்தை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது ஒடுக்கப்படும் சிறுபான்மை இனத்துக்காகவே.

தவிர தமிழினத்துக்கு மாத்திரமானதல்ல என்பதை அனைத்து சிறுபான்மை இனங்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

. கடந்த வியாழக்கிழமை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி 13 ஆவது திருத்த சட்ட மூலம் தொடர்பில் ஒரு கருத்தை



வெளியிட்டிருந்தார். அதாவது,

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தை சட்ட மூலத்தில் உள்ளது போன்று ஒவ்வொரு மாகாணங்களுக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ் விடயத்தில் தெற்கு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம் எனத் தெரிவித்திருந்தார்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்தினால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஒரு பெரும்பான்மை இனத்தவர் கூறுவதை விட சிறுபான்மை இனத்தவர் கூறும் போது ஏற்படும் தாக்கம் அதிகமானது.

இங்கு 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் என்பது தமிழினத்துக்காக உருவாக்கப்பட்டது போலவும் அதை வழங்கினால் பாரிய முரண்பாடுகள் ஏற்படும் என்பது போலவும் அவர் தெரிவித்திருந்தார்.

உண்மையில் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை அமுல்படுத்தினால் அது சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கும் பயனுள்ளதாகவே அமையும்.

ஏனெனில் வடக்கு கிழக்கு பிரிப்பிற்குப் பின்னர் கிழக்கு மாகாண சபை முஸ்லிம் மக்களின் ஆளுகைக்குள் இருப்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

அமைச்சர் அலிசப்ரியின் மேற்குறித்த கருத்து 13 ஆவது திருத்த சட்ட மூலம் தொடர்பில் முரணான தகவலை முன் வைப்பதாய் உணர முடிகிறது.

13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதில் இந்தியா மிகத் தீவிரமாக நிற்கின்ற போதிலும் இலங்கை ஆட்சியாளர்கள் கழுவும் மீனில் நழுவும் மீனாய் இதுவரை காலமும் இருந்துவிட்டனர்.

ஆயினும் ஜனாதிபதி ரணிலின் அண்மைய இந்திய விஜயத்தின் பின் இந்தியாவின் 13 தொடர்பான நிலைப்பாட்டை மிகத் தெளிவாக உணரக் கூடியதாக உள்ளது.

இலங்கையில் 13 ஆவது திருத்த சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்டால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் குறையும் எனவும் இந்தியா நம்புகிறது.

ஜனாதிபதி ரணிலின் இந்திய விஜயத்தின் பின் வடக்கு கிழக்கிற்கான இந்தியாவின் கரிசனை மிக நெருக்கமாக உள்ளதை காண முடிகிறது.

இதற்கு காங்கேசன்துறை-தூத்துக்குடி கப்பல் சேவை, தலைமன்னார்- காரைக்கால் படகு சேவை திட்டங்களை கூறிவிட முடியும்.

இந்தியாவின் 13 தொடர்பான காய் நகர்த்தல்களை நேரடியாக எதிர்க்கத் தயங்கும் இலங்கை ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரினூடாக எதிர்ப்புகளை வெளியிட்டு தமது நிலைப்பாட்டை இந்தியாவிற்கு சூசகமாக தெரிவிக்க முற்படுகின்றனர் போலும்.

சோற்றுக்காகப் போராடுகிறோம். அதற்காய் கிடைக்கும் பாணை இழந்து விடக் கூடாது.

முதலில் பாணை வாங்கி உண்போம். அதன் தென்பில் சோற்றிற்கான போராட்டத்தை முன்னெடுப்போம். என்பதே 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் மக்களின் மனநிலையும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## இலங்கையில் சைவசமயம் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:**-என்ன விதானையார் ஒரு மாதிரியாக இருக்கிறியள். ஏதேனும் சிக்கலோ.

**விதானையார்:**- ஈழத் தமிழனாகப் பிறந்த நாங்கள் நிம்மதியாக இருக்க முடியுமோ?

இந்தாப் பாருங்க, திருகோணமலையில கன்னியா வெந்நீரூற்றில இருந்த பிள்ளையாரை ஆக்கிரமிக்கத் தொடங்கின பௌத்த-சிங்களப் பேரினவாதம். இப்ப பறாளாய் முருகன் கோவிலில இருக்கிற அரச மரம் சங்கமித்த வைத்தது எண்டு அறி விக்கிற அளவுக்கு வந்திட்டினம்.

இந்த நிலைமை எங்க போய் முடியுமோ தெரியல்ல.

**பண்டிதர்:**-இது வந்து பாருங்கோ, இந்து சமயத்தை அழிக்கிறதுக்கான முயற்சி. இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளும் இதற்கு ஆதரவு கொடுக்கினம். அது தான் உண்மை.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் பண்டிதரை நிமிர்ந்து பார்த்தனர்.

என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்... சாத்திரியார் சதாசிவம் அவசரமாகக் கேட்டார்.

**பண்டிதர்:**- இலங்கையில எத்தனையோ இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதோட சிவாலயங்கள் பலவற்றைப் பௌத்தம் ஆக்கிரமிக்கிறது.

குருந்தூர் மலையில, வெடுக்குநாறியில எண்டு ஒரு பட்டியல் நீள்கிறது. சைவக் கடவுள்களின் விக்கிரகங்கள் உடைக்கப்படுகின்றன. ஆனாலும் உலக நாடுகள் இது பற்றி வாய் திறக்க வேயில்லை.

இதற்கு அடிப்படைக் காரணம் இந்து சமயத்தை அழிக்க வேணும் எண்டு உலக நாடுகள் மறைமுகமாக இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஆதரவு கொடுக்கினம்.

**சிறாப்பர்:**- ஏன்? பண்டிதர் ஐயா, இது விசயத்தில இந்தியாவும் மௌனமாகத்தானே இருக்குது.

**பண்டிதர்:**- இந்தியா மௌனமாகத் தானே இருக்கும். தமிழ் அரசியல் தலைவர்களில முதன்மையானவர்கள் அமெரிக்காவின்ர நிகழ்ச்சி நிரலிலயல்லோ ஓடித்திரியினம்.

இந்தாப்பாருங்க, அண்மையில தமிழ் அரசியல் தலைவர்களை அமெரிக்கத் தூதுவர் சந்தித்தார்.

அந்தச் சந்திப்புக்கு நீயா... நானா... எண்டு எல்லாரும் ஓடிப்போயிற்றினம்.

இதுகளையெல்லாம் இந்தியாவும் கவனித்துக் கொண்டு தானே இருக்கும்.

**மூப்பர்:**- அதெண்டால் உண்மைதான். இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதுறதுக்கே சம்பந்தர் தயங்குகிறார்.

இந்தியாவுக்கு வாருங்கள், அங்கு சந்திப்போம், கதைப்போம் எண்டு பிரதமர் மோடி தமிழ்க் கூட்டமைப்பிட்ட சொன்னவர். ஆனால் அவர்கள் இந்தியாவுக்குப் போறதுக்கும் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கும் தயாராக இல்லை.

ஏனோ தெரியாது. அவர்கள் அதைத் தவிர்த்துக் கொண்டுதான் வருகினம்.

**பண்டிதர்:**- தாங்கள் இந்தியாவோட நிண்டால், அமெரிக்காவுக்குப் பிடிக்காது எண்ட கோதாவில தான் எங்கட ஆட்கள் பிரதமர் மோடியைச் சந்திக்காமல் தவிர்க்கினம்.

**வாத்தியார்:**-பண்டிதர் ஐயா! இதுக்குள்ள நிறைய அரசியல் இருக்குது. அதில முதலாவது அரசியல், தமிழ் என்பதை ஏற்றுக்கொள்கிற தமிழ் அரசியல்வாதிகள், சைவசமயத்தை ஏற்றுக் கொள்ளல்ல. இந்த விசயத்தில அவர், இவர் எண்டில்ல. பொதுவாக எல்லாரும் அப்படித்தான்.



ஒரு சில தமிழ் எம்.பிக்கள் சைவசமயத்தில விசுவாசமாக இருந்தாலும் அவையளும் ஒண்டும் செய்ய முடியாது.

ஏனெண்டால், அமெரிக்காவின்ர சார்புடைய அரசியல் கருத்தாளர்களும் சைவசமயத்தையல்லோ அடிக்கடி தாக்கி எழுதுகினம். அதோட திருச்சபையைப் பகைத்தால், கிறிஸ்தவ மக்களின் வாக்குகள் தங்களுக்கு கிடைக்காமல் போகும் எண்ட பயமும் இருக்குது.

ஆகையால, முதலில சைவசமயத்தை அழித்து தமிழைப் பிரித்தெடுக்க வேணும் என்பது முதலாவது அரசியல் நோக்கம்.

**கங்காணி:**-என்ன வாத்தியார் சொல்லுறியள். நீங்கள் சொல்லுறதைக் கேட்க எனக்குத் தலையைச் சுத்துது.

**வாத்தியார்:**- ஏன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர 37 ஆவது பட்டமளிப்பு விழாவில நுழைவாயிலில வைக்கப்பட்ட அலங்கார வளைவு என்ன அமைப்பில இருந்தது என்பது தெரியும் தானே.

**சிறாப்பர்:**- அட, சங்கதி அப்படியோ? அப்ப நந்திகளை வைக்க முடியாது தானே!

**விதானையார்:**- வாத்தியார், பறாளாய் முருகன் கோவில் அரச மரம், கீரிமலைக் கேணி இதெல்லாம் தொல்லியல் சின்னங்கள் எண்ட வர்த்தமானி அறிவிப்புகளுக்குள்ள நிறைய சதி நோக்கங்கள் இருக்குது. ஐக்கிய தேசியக் கட்சியின்ர தேர்தல் விஞ்ஞாபனத்தில, வடக்கு-கிழக்கில ஆயிரம் விகாரைகள் அமைக்கிறது எண்ட தீர்மானம் இருக்குது.

இருந்தும் அப்போது அந்தத் தீர்மானத்தை சம்பந்தர் எதிர்க்கவில்லை. மாறாக, இலங்கையில பௌத்தத்திற்கு முன்னுரிமை என்பதை தாங்கள் ஏற்றுக் கொள்வதாகச் சம்பந்தர் அறிவித்தார்.

அந்த அடிப்படையிலதான், பறாளாய் முருகன் ஆலய அரச மரம் சங்கமித்தையால வைக்கப்பட்டது என்ற வர்த்தமானி அறிவிப்பாகும்.

**மூப்பர்:**- அப்ப இனி அந்த அரச மரத்தடியில புத்தர் சிலை வைபடும் தானே!

**விதானையார்:**- அதுவும் ஆயிரம் விகாரைகளில் ஒண்டு.

**மூப்பர்:**-வாத்தியார் நாங்கள் எதையும் நிதானமாகக் கதைக்க வேணும். ஒரு சமயத்தைப் பாதிக்கிற மாதிரி எங்கட சம்பாசனை இருக்கக் கூடாது.

**வாத்தியார்:**- மூப்பர் எங்களுக்கு சமயப் பேதமை கிடையாது.

ஆனால் சில உண்மைகளை நாங்கள் ஏற்றுத் தானாக வேணும்.

கொரோனாக் காலத்தில இறந்த இஸ்லாமியர்களின் உடல்களை எரிக்க வேணும் எண்டு மகிந்த அரசு சட்டம் கொண்டு வந்த போது, அதற்கு உலகளவில ஏற்பட்ட எதிர்ப்புத் தெரியும் தானே. அந்த விடயத்தில மகிந்த தோற்று இஸ்லாமியர்கள் வெற்றி பெற்றனர்.

அதேபோல கச்சதீவில கடற்படையினர் வைத்த புத்தர் சிலையை மீளவும் எடுக்க வேண்டியதாக நிலைமை இருந்தது.

ஆனால் சைவ சமயத்தைப் பாருங்க, எங்கெல்லாம் ஆதிசிவன் ஆலயம் இருக்கிறதோ அங்கெல்லாம் புத்தரை வைக்கினம். விகாரை அமைக்கினம். இருந்தும் இதைத் தடுக்க தமிழ் அரசியல்வாதிகள் பின்னடிக்கினம்.

தங்கட பின்னடிப்பு வெளியில தெரியாமல் இருக்க, சிலர் நடிக்கினம். இதுதான் உண்மை.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்லாயிரம் மக்கள் வாழ வளமுள்ள பூமியில் வெப்ப அதிகரிப்பு ஆபத்தானதா?

**சுருதிகா — மந்திகை**

**வகுப்பறையில் ஆண்களுக்கு விழும் அடியில் பாதி கூட பெண்களுக்கு இல்லையே?**

ஒரு காலத்தில் வீட்டில் சண்டை என்றால் பிள்ளைகள் அயல் வீட்டுக்காரரிடம் ஓடிச் சென்று ஐயோ அப்பா அம்மாவைப் போட்டு அடிக்கிறார். ஓடிவாங்கோ என்று தான் கூப்பிடுவார்கள்.

ஆனால் இன்றைய நிலை வேறு.

ஐயோ ஓடிவாங்கோ ஓடிவாங்கோ அம்மா அப்பாவைப் போட்டு அடி அடியென்று அடிக்கிறார்.

அப்பா சாகப்போகிறார். ஓடிவந்து அப்பாவைக் காப்பாற்றுங்கோ என்பதே இன்றைய நிலை. இதற்கு வகுப்பறை அடிக் கலாசாரமும் ஒரு காரணமாக இருக்கலாம் போல.

**சுதன் — குப்பிழான்**

**ஓடிய இரத்த ஆறுக்கே தீர்வில்லையாம். சமஷ்டி கேட்டால் இரத்த ஆறு ஓடுமாமே?**

என்ன செய்வது ஒரு காலத்தில் அந்தப் பெயரைக் கேட்டாலே ஒண்டுக்கு இரண்டுக்கெல்லாம் சேர்த்து போனவர்கள் எல்லாம் இப்போது வீராப்பு வசனம் பேசுகிறார்கள்.

இதைப் பார்க்கும் போது எங்கள் அப்பு அடிக்கடி சொல்லும் ஒரு வசனம் தான் நினைவுக்கு வந்தது.

நாகமில்லாத ஊருக்கு நாக்கிளிப் புழு படமெடுத்தாடும் நாகமாம்.

சரி நடக்கட்டும். நடத்திமுடிக்கட்டும். குட்ட குட்ட நாம் குனிவோம் என நினைப்பது மடைமைத்தனம். குனியக் குனியக் குட்டலாம் என்று நினைத்தால், ஒரு கட்டத்துக்கு மேல பேச்சு வராது... வீச்சுத்தான்...

**வைரமுத்து-ஜெகமோகன் — கொக்குவில்**

**வடக்கின் கற்பகதரு பனை வளத்தை யாரும் கண்டு கொள்ளவில்லையே வியாசரே?**

வைத்திய கலாநிதி Dr.சிவன்சுதன் அவர்கள் பனை வளம் தொடர்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் வட. கிழக்கில் இருப்பது போல பனை வளம் அபிவிருத்தி அடைந்த நாடுகளிடம் இருக்குமாக இருந்தால் நாம் இன்று பூட்சிற்றிகளில் பனம்பழங்களையும் பனை சார் உணவுகளையும் அதிக விலை கொடுத்து வாங்கி உண்டிருப்போம் என. அனைத்து சத்துக்களும் நிறைந்த பனை உணவில் இருக்கும் ஆரோக்கியம் தொடர்பில் எவரும் அறிவதாய்த் தெரியவில்லை.

தற்போது பனை உணவுகளைச் சாப்பிட்டால் அவர்களை ஒரு மாதிரியாகப் பார்க்கும் கலாசாரம் தான் இருக்கிறது.

பனை வளம் ஒன்றே போதும் எம்மையும் எம் நாட்டையும் ஆரோக்கியமாக வைத்திருக்க என்ற உண்மையை நாம் புரிந்து கொண்டால் சரி.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**சுரேசன் — பத்தமேனி**

**யாழ்.மாவட்டத்தில் உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க; தரிசு, சதுப்பு நிலங்களில் பாரிய குளங்களை அமைத்து மழை நீரை கடலுடன் சேர விடாது தடுத்து மக்களுக்கு பயனுள்ளதாக்க முடியாதா?**

நல்ல திட்டம் தான் ஆனால் அந்தப் பூனைக்கு மணி கட்டுவதுதான் யார் என்ற கேள்வி உண்டு. எம் அரசியல்வாதிகளுக்கு பிரதேசவாதம் பேசவும் சுயநல அரசியல் செய்யவும் தான் தெரியுமே தவிர, மக்களுக்கு பயன் தரக் கூடிய திட்டங்களை இனங்காணவோ அதை நடைமுறைப்படுத்தவோ தெரியாது.

அவர்களுக்கு அடுத்த முறை தாம் எப்படி பதவிக்கு வரமுடியும் அதற்கு எந்த குறூப்பிற்கு எந்தக் கடையில் மாதாமாதம் பாட்டி வைக்கலாம். நக்குண்டாரை உருவாக்கி அவர்களை நாவிழுக்கச் செய்வதனூடே தாம் அடைய வேண்டியதை அடைந்து விடுவார்கள். அதற்காக எந்த எல்லை வரை செல்வார்கள் அவ்வளவே.

**மகாலட்சுமி — கொக்குவில்**

**திடீரென்று கடவுள் உங்கள் முன் தோன்றினால் என்ன செய்வீர்கள்.?**

ஓ... நீதான் கடவுளா? நமக்குத்தான் நீ கஷ்டத்துக்கு மேல கஷ்டம் தந்து கொண்டிருக்கிறாயே. ஏன் உனக்கு என்மேல் அவ்வளவு கோபம்?

கடவுளே எனக்கு ஒரே ஒரு ஆசை இருக்கிறது. ஒருநாள், ஒரே ஒரு நாள் நீ நானாகவும் நான் நீயாகவும் இருக்க வேண்டும். ஒருநாள் நானாக வாழ்ந்து பார் அப்போது தெரியும் நான் படும் பாடு.



நடிகைமணி வி.வி.வைரமுத்து ஐயா பற்றிக் கூறுங்களேன் வியாசரே?

**ராதா நிரேஷ் — யாழ்ப்பாணம்**

**கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பது?**

எம்மவர்களிடம் இருக்கும் பெரிய பிரச்சினையே இதுதான். அதாவது கிணற்றுத் தவளைகள் போல அந்த வட்டத்துக்குள் இருந்து கொண்டு இது தான் உலகம் எனக் கருதி அதை அனைவரிடத்தேயும் தம்பட்டம் அடிப்பது.

ஏட்டுச்சுரக்காய் கல்வியைக் கற்றுவிட்டு அதுதான் உலகின் மிக உயர்ந்த கல்வி என நம்பி அரச வேலைக்காய் காத்திருந்து இளமையைத் தொலைத்து விட்டு அதனூடே சுகரும் பிறசரும் உச்சத்தில் ஏறிவிட உடல் மெலிந்து நடக்க இயக்கமற்று கிளினிக் வரிசையில் நிற்பவர்களுக்கானது தான் இந்த கைமண் அளவான கல்வி.

இதை உணராதவரை எதுவும் நடந்துவிடப் போவதில்லை.

**மதுவன் — மீசாலை**

**நடிகைமணி வி.வி.வைரமுத்து ஐயா பற்றிக் கூறுங்களேன் வியாசரே?**

வேலப்பா–ஆச்சிக்குட்டி தம்பதியர்களுக்குக் கிடைத்த அரும் புத்திரனே நடிகைமணி வி.வி.வைரமுத்து. காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் அரிச்சந்திர மயாண காண்ட இசை நாடகம் உலகத் தரம் வாய்ந்த இசை நாடகமாகும்.

நடிகைமணி ஐயாவின் நடிப்பு, பாடல் திறன் பற்றிக் கூறுவதென்றால், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஒரு பேட்டியில் நடிகைமணி வி.வி.வைரமுத்து போல தன்னால் திறம்பட நடிக்க முடியாது என்று கூறியதை பதிவிட முடியும். காலத்தால் அழியாத அந்த அரும் கலைஞருக்கு காங்கேசன்துறையில் சிலை அமைக்கப் பெற்றிருப்பது எம் அனைவருக்கும் பெருமைக்குரிய விடயமே.

**திகான் — வடமராட்சி**

**பல்லாயிரம் மக்கள் வாழ வளமுள்ள பூமியில் வெப்ப அதிகரிப்பு ஆபத்தானதா?**

கள்ள மண் அகழ்பவரைப் பார்த்து நாம் கண்டும் காணாததுமாய் செல்கிறோம்.

இயற்கை காட்டை அழித்து நாட்டை உருவாக்கும் மடையர்களை படித்தவர்கள் என மதிப்பு மரியாதை வழங்குகின்றோம்.

மரங்களை வெட்டி விறகாக்கி விற்பனை செய்யும் பாதகரை நாம் திரும்பிக் கூட பார்ப்பதில்லை. குளங்களையும் ஏரிகளையும் மண் நிரவி நிலப்பரப்பாக்கி அதைக்கூறுபோட்டு விற்பனை செய்யும் கள்ள உறுதி முடிப்பவர்களை எம் கண்ணுக்குத் தெரிவதே இல்லை. அபிவிருத்தி எனும் போர்வையில் இயற்கை வளங்களைச் சுரண்டி அதில் இலாபம் உழைக்கும் முதலாளி முதலைகளை நாம் எதிர்க்கத்துணிவதில்லை.

இவ்வாறு இயற்கைத் தாயை சித்திரவதை செய்தால் இந்த பூமி வெப்பக்காற்று நிறைந்து வெடிக்குமல்லவா?

இதைப் புரியாமல் மனிதன் தனது தலையிலேயே மண்ணை வாரி அள்ளிப்போட்டுக் கொண்டு அதற்கு அபிவிருத்தி எனப் பெயர் சூட்டி ஏமாந்து போகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: அழகு நிலா

பாடகர் : சீர்காழி கோவிந்தராஜன்

இசை : கே. வி. மஹாதேவன்

இயற்றியவர்: ஏ. மருதகாசி



மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான்
வாழும் வகை புரிந்து கொண்டான்
இருந்த போதும் மனிதனுக்கு
ஒன்று மட்டும் தெரியவில்லை ஹோ
மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான்
வாழும் வகை புரிந்து கொண்டான்
இருந்த போதும் மனிதனுக்கு
ஒன்று மட்டும் தெரியவில்லை ஹோ

இனிய குரலில் குயில் போலே
இசையும் அழகாய் பாடுகின்றான்
எருதுகள் போலே வண்டிகளை
இழுத்துக் கொண்டு ஓடுகின்றான்
வனத்தில் வாழும் பறவைகள் போல்
வானில் பறந்து திரிகின்றான்
வனத்தில் வாழும் பறவைகள் போல்
வானில் பறந்து திரிகின்றான்
மனிதனாக வாழ மட்டும்
மனிதனுக்குத் தெரியவில்லை

மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான்
வாழும் வகை புரிந்து கொண்டான்
இருந்த போதும் மனிதனுக்கு
ஒன்று மட்டும் தெரியவில்லை ஹோ

கொல்லும் பாம்பின் கொடும் விஷத்தை
சொல்லில் கொடுக்கத் தெரிந்து கொண்டான்
குள்ளநரி போல் தந்திரத்தால்
குடியைக் கெடுக்கப் புரிந்து கொண்டான்
வெள்ளிப் பணத்தால் மற்றவரை
விலைக்கு வாங்கத் தெரிந்து கொண்டான்
வெள்ளிப் பணத்தால் மற்றவரை
விலைக்கு வாங்கத் தெரிந்து கொண்டான்
மனிதனாக வாழ மட்டும்
மனிதனுக்குத் தெரியவில்லை ஹோ

மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான்
வாழும் வகை புரிந்து கொண்டான்
இருந்த போதும் மனிதனுக்கு
ஒன்று மட்டும் தெரியவில்லை ஹோ

# மாயமான மந்திரி பறிக்கப்பட்ட பதவி

சீன அதிபரின் கோபத்துக்கு ஒருவர் ஆளானால், அவர் சில பல காலத்துக்கு மாயமாகிவிடுவார் என்பது அந்த நாட்டின் எழுதப்படாத விதி. அந்த வகையில், சர்வதேச அரங்கில் சீனாவின் முகமாக விளங்கிய கின் காங் கடந்த சில வாரங்களாக மாயமாகியிருக்கிறார். அதோடு, அவர் வகித்துவந்த வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியும் தற்போது வேறொருவருக்கு மாற்றப்பட்டிருக்கிறது.'கின் காங் என்னவானார்?' என்பதே சீன மக்கள் மட்டுமன்றி, உலக நாடுகளின் வெளியுறவுத்துறை அதிகாரிகளுக்கும் இருக்கிற முக்கியக் கேள்வி.

### யார் இந்த கின் காங்?

1966ஆம் ஆண்டு சீனாவின் டியான்ஜின் (Tianjin) நகரில் பிறந்தவர் கின் காங். சீன பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இன்டர்நேஷனல் ரிலேஷன்ஸ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச அரசியலைக் கற்று, பட்டம் பெற்றார். 22 வயதில் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தவர், தலைநகர் பீஜிங்கிலுள்ள தூதரகப் பணிகளுக்கான சேவை மையத்தில் வேலைக்குச் சேர்ந்தார். ஆங்கிலப் புலமையாலும், சுறுசுறுப்பான பணிகளாலும் தனது 26-வது வயதிலேயே சீன வெளியுறவுத்துறையில் பணிக்குச் சேர்ந்தார். படிப்படியாக உயர்ந்து சீன வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளரானார். அந்தச் சமயத்தில், சீனாவை விமர்சிக்கும் மேற்கத்திய பத்திரிகைகளுக்கு பதிலடி கொடுத்து, நாடு முழுவதும் பிரபலமடைந்தார்.

தொடர்ந்து, பிரிட்டனுக்கான சீனத் தூதராகப் பணியாற்றினார். 2014-18 காலகட்டத்தில் அதிபர் ஜி ஜின்பிங்கின் தலைமை புரோட்டோகால் அதிகாரியாக இருந்தார் காங். அந்தச் சமயத்தில், அதிபரின் வெளிநாட்டுப் பயணங்கள், உலகத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகள் உள்ளிட்ட விஷயங்களை முழுக்க கவனித்துக்கொண்டவர் காங்தான். இதன் காரணமாக, ஜின்பிங்கின் குட்புக்'கில் இடம்பிடித்தார். 2018ஆம் ஆண்டு, சீன வெளியுறவுத் துறையின் இணை அமைச்சராகப் பொறுப பேற்றுக்கொண்ட போது, ஜின்பிங்கின் நெருங்கிய வட்டத்திற்குள் சென்றார் காங்.

2021 இல் அமெரிக்காவுக்கான சீனத் தூதராக நியமிக்கப்பட்டார் காங். அமெரிக்கா - சீனா இடையேயான அதிகார யுத்தம் உச்சம் தொட்டிருந்த சமயத்தில் இந்தப் பதவியில் காங் நியமிக்கப்பட்டது சர்வதேச அரங்கில் தலைப்புச் செய்தியானது. 2022, டிசம்பர் 30 அன்று சீன அரசின் மிக முக்கிய அங்கமான வெளியுறவுத்துறையின் அமைச்சராகப் பொறுப் பேற்றுக்கொண்டார் காங். சீனாவின் இளம் வெளியுறவுத்துறை அமைச்சர் என்று கொண்டாடப் பட்ட காங்தான், ஏழே மாதங்களில் பதவிப் பறிப்புக்கு ஆளாகியிருக்கிறார்.

### ஏன் மாயமானார்?

வெளியுறவுத்துறை அமைச்சரான பிறகு சீனா முழுவதும் பேசப்பட்ட அரசியல் தலைவராக இருந்தார் காங். பல சந்திப்புகள் மூலம் உலக அரங்கிலும் ஜின்பிங்குக்குப் பிறகு சீனாவின் முகமாக மாறினார். ஜூன் 18 ஆம் திகதி, அமெரிக்காவின் வெளியுறவுத் துறைச் செயலர் ஆன்டனி பிளிங்கனை பீஜிங்கில் சந்தித்துப் பேசினார் காங். பின்னர், 25ஆம் திகதி ரஷ்யா, வியட்நாம், இலங்கையின் வெளியுறவுத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அதன் பிறகு, கின் காங் பொதுவெளிக்கு வரவேயில்லை. ஜூலை 4 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறைத் தலைவர் ஜோசப் போரல்லை (Josep Borrell), காங் சந்திப்பதாக இருந்தது. ஆனால், காரணம் எதுவும் சொல்லாமல் இந்தச் சந்திப்பை ரத்துசெய்து விட்டது சீனா என்றனர் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள்.

தொடர்ந்து, ஜூலை 11இல் இந்தோனேசியாவில் நடந்த தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் காங் கலந்துகொள்ளத் தவறிய போது, உடல்நலக் குறைவு என்று காரணம் சொல்லப்பட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் அசுர வளர்ச்சி பெற்று, ரைஸிங் ஸ்டார் என அறியப்பட்ட கின் காங் திடீரென மாயமானது சீன மக்கள் மத்தியில் சந்தேகங்களைக் கிளப்பியது. 'வெய்போ' தேடல் இணையதளத்தில் காங் பற்றிய தேடல்கள் வழக்கத்தைவிட 5,000 மடங்கு அதிகரித்தன. உலக நாடுகளும் அவர் என்ன ஆனார் எனத் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டின.

பிரபல தொலைக்காட்சி செய்தியாளர் ஃபூ (Fu Xiaotian) உடன் காங் ரகசிய உறவு வைத்திருந்ததாகவும், அவர்களுக்கு ஒரு குழந்தை இருப்பதாகவும் செய்திகள் பரவின. இது தொடர்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கையில் காங் தண்டிக்கப் பட்டதால்தான், அவர் மாயமாகி விட்டார் என்று சொல்லப் படுகிறது. காங் மாயமான நாளிலிருந்து ஃபூவும் பொது வெளியில் தோன்றவில்லை. ஃபூ மாயமாவதற்கு முன்பு கடைசியாகக் காங்கைத்தான் பேட்டி கண்டிருக்கிறார். அந்தப் பேட்டியில் அவர்கள் காட்டிய நெருக்கமே, இருவருக்கும் இடையிலான ரகசியக் காதலை வெளிக் கொண்டு வந்தது என்கிறார்கள். உலகத் தலைவர்களைப் பேட்டி எடுக்கும் ஃபூவுடன் காங் நெருக்கம் காட்டுவதால், அரசின் ரகசியங்கள் வெளியுலகுக்குக் கசிந்து விடலாம் என எண்ணித்தான் காங் தண்டிக்கப்பட்டதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ஜூலை 25 ஆம் திகதியன்று எந்தக் காரணமும் சொல்லப்படாமல் காங்கின் பதவி பறிக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரான வாங் யி, மீண்டும் வெளியுறவுத்துறை அமைச்சராக்கப்பட்டிருக்கிறார். அமெரிக்காவிலுள்ள வெளிநாட்டு உறவுகள் கவுன்சிலின் சீன ஆய்வுகளுக்கான ஆராய்ச்சியாளர் இயான் ஜான்சன், கடந்த சில மாதங்களாகவே அதிபர் ஜின்பிங்குடன் கருத்து மோதல்களில் ஈடுபட்டுவந்தார் கின் காங் என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம், "அதிபரை எதிர்த்ததால்தான் காங் மாயமாகியிருக்கிறார்", பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்' என்ற பேச்சுகளும் எழத் தொடங்கியிருக்கின்றன.

ஷி ஜின்பிங் அதிபரான பிறகு அடிக்கடி சீனப் பிரபலங்கள் மாயமாகியிருக்கின்றனர். அரசை விமர்சித்ததற்காக 'அலிபாபா' நிறுவனர் ஜாக் மா, சீன கம்யூனிஸ்ட்டின் பொலிட்பீரோ உறுப்பினர் ஜாங் கோலிமீது பாலியல் குற்றச் சாட்டுகளை



அடுக்கிய உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் வீராங்கனை பெங் ஷூவாய், பிரபல நடிகை ஃபேன் பிங்பிங் எனப் பலரும் கடந்த காலங்களில் திடீரென மாயமாகியிருக்கின்றனர். பின்னர், சில மாதங்களில் பொது வெளியில் தோன்றி சீன அரசைப் புகழ்ந் திருக்கின்றனர்.

அந்த வரிசையில் தற்போது முக்கிய அமைச்சரே காணாமல் போனது உலகம் முழுவதும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவர் எப்போது பொதுவெளியில் தோன்றுவார்... என்ன பேசுவார் என்பதைத் தெரிந்துகொள்ள, சீனா மட்டுமல்ல... உலக நாடுகளும் ஆவலுடன் இருக்கின்றன.

ஒற்றை நபரின் பிடியில் ஒட்டுமொத்த நாடும் இருந்தால், என்னென்ன கொடுமைகள் நடக்கும் என்பதற்குச் சீனாவே உதாரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பணம் என்ன மரத்திலா காய்க்குது?" என்ற கேள்வியை பலரும் கடந்து வந்திருப்போம். மரத்தில் காய்க்கிறதோ இல்லையோ... செடியில் காய்க்கிறது என்று சொல்லுமளவுக்கு ஒரு செடியின் பெயரே பணச் செடி (Money plant)!

சொல்லப்போனால், "பணம் கொட்டும்" என்கிற நம்பிக்கையுடன்... பலரும் வீடுகளில் 'மணி பிளான்ட்' செடிகளை வளர்க்கிறார்கள். ஆம்... மணி பிளான்ட்டை வீட்டில் வளர்த்தால் செல்வம் பெருகும், மணி பிளான்ட்டைத் திருடி வந்து வீட்டில் வளர்த்தால்தான், செடி நன்றாக வளரும் செல்வமும் பெருகும் என்று ஏகப்பட்ட கதைகள் இதைச் சுற்றி வருகின்றன.

"மணி பிளான்ட்" பெயரைச் சுற்றியும் பற்பல தகவல்கள் விரவிக் கிடக்கின்றன. "மணி பிளான்ட்டின் இலைகள், பார்க்கப் பணம் போலவே காட்சியளிப்பதால் மணி பிளான்ட் என்று அழைக்கப்படுகிறது", வீட்டில் செல்வச் செழிப்பைப் பெருக்கும் என்று நம்பப்படுவதால், மணி பிளான்ட் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட தகவல்களுடன், தேவதைக் கதை போன்றதொரு கதையும் ஓடிக் கொண்டிருக்கிறது.

"தைவான் நாட்டில் ஓர் ஏழை கடுமையான பணக்கஷ்டத்தில் தவிக்கிறார். பணக்கஷ்டம் தீர, கடவுளிடம் தீவிரமாக வேண்டிவருகிறார். ஒரு நாள் தனது தோட்டத்தில் புதிதாக ஒரு செடியைப் பார்க்கிறார். இந்தச் செடி கஷ்டத்தைத் தீர்க்கும் என்று நம்பி, நன்றாகப் பராமரித்து வளர்க்கிறார். அந்தச் செடி... நிறைய விதைகள், காய்கள், பழங்கள் என வாரி வழங்குகிறது. அவற்றை விற்று, பணக் கஷ்டத்திலிருந்து மீள்கிறார் அந்த ஏழை."

இந்தக் கதையையொட்டி... அந்தச் செடியைப்போல, மணி பிளான்ட்டும் பணத்தை அள்ளித் தரும் என்று உலகம் முழுக்கவே பரவலாக நம்பப்படுகிறது. அழகுத் தாவர வகைகளில் ஒன்றான மணி பிளான்ட்... வீடு, அலுவலக மேசை, கார் என எங்கு வேண்டுமென்றாலும் வளரும் தன்மையுடையது. பச்சை நிறத்தைப் பார்ப்பதால் கண்களுக்கும், மூளைக்கும் ஒருவித ரிலாக்ஷேசன் கிடைக்கிறது என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். அதற்காகவும் இந்தச் செடி வளர்க்கப்படுகிறது. இச்செடி, ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தது, சீனாவிலிருந்து வந்தது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஒரு செடியின் விலை 150 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை ஆன்லைனில் விற்பனையாகிறது.

இந்தச் செடி குறித்துத் தமிழகத் தோட்டக்கலைத்துறையின் உதவிப் பேராசிரியர் கார்த்திகேயனிடம் பேசியபோது, மணி பிளான்ட்களை நாம் பெரும்பாலும் வீட்டிற்குள்தான் வளர்த்துவருகிறோம். இதற்கு போத்தோஸ் (Pothos), டெவில் ஐவி (Devil's ivy) என்ற பெயர்களும் உண்டு. இது, கொடி வகையைச் சேர்ந்த தாவரமாகும். இந்தச் செடியின் இலை பச்சை நிறத்தில் அல்லது பச்சை கலந்த வெள்ளை நிறத்திலும் இருக்கும். நிழல் மற்றும் பாதி நிழலில் வளரும் தன்மை உடையது. வீட்டிற்குள் எங்கு வைத்தாலும் நன்றாக வளரும். வளர்ப்பது மிகமிக எளிது. தண்டை உடைத்து மண் அல்லது தண்ணீர் என்று எதில் வைத்தாலும் நன்றாக வளரும். இதன் விலையும் குறைவு, பராமரிப்பும் குறைவு.

மணி பிளான்ட் வீட்டிற்குள் உள்ள மாசுக்களை கிரகிக்கும் ஆற்றல் உடையது. ஆனால், கதிர்வீச்சை கிரகிக்குமா என்பதைப் பற்றி இன்னும் ஆய்வு செய்யவில்லை. முக்கியமாக, மணி பிளான்ட்டை வளர்த்தால், வீட்டில் செல்வம் பெருகுமா என்ற கேள்விக்கு யாராலும் பதில் கூறமுடியாது. ஏனென்றால், இது நம்பிக்கை சார்ந்த விஷயம் என்றார்.

கூடவே மரங்களையும் வளருங்கள் மக்களே... பணமும் காய்க்கும், சுற்றுச்சூழலையும் காக்கும்!

# வீட்டில் 'மணி பிளாண்ட்' செடிகளை வளர்த்தால் செல்வம் பெருகுமா?





# குழந்தையைத் தூக்கிப்போட்டு விளையாடுபவரா நீங்கள்?

குழந்தைகளைப் பார்த்தாலே யாருக்கும் கொஞ்சத் தோன்றும் அவர்களுடன் விளையாடுவதோ பேரின்பமாக இருக்கும். சிலர் மகிழ்ச்சி மிகுதியில், குழந்தைகளைத் தூக்கிப் போட்டும் விளையாடுவார்கள். ஆனால், இது மிகவும் ஆபத்தான விளையாட்டு இத்தகைய விளையாட்டை ஷேக்கன் பேபி சிண்ட்ரோம்" (Shaken baby syndrome) என்று அழைப்பார்கள். குழந்தைகளை மிகவேகமாகக் குலுக்குவதாலும், தலைக்குமேல் தூக்கிப்போட்டு விளையாடுவதாலும் மூளையில் காயம் ஏற்பட்டு, பாதிக்கப்படும். அதாவது நம்மையறியாமலேயே நாம் குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒருவித ஆபத்து இது.

## பாதிப்பின் இரு நிலை

ஷேக்கன் பேபி சிண்ட்ரோம் என்பது, ஒன்று முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்படலாம். குழந்தைகளைத் தூக்கிப்போட்டு விளையாடும்போது, மூளையில் ரத்தக் கசிவை உண்டாக்கி, அதன்மூலம் மூளையில் உள்ள நரம்புகளையும் பாதித்து, நாளடைவில் உடல் செயலிழக்கும் நிலைகூட வரலாம். சில நேரங்களில் மரணம்கூட ஏற்படலாம்.

மூளை அதிர்ச்சியடைந்த குழந்தையானது இரு வகையான நிலையை அடையலாம். ஒன்று, குழந்தையின் இயல்பான சுறுசுறுப்பு மாறலாம், அழுதுகொண்டே இருக்கும். மற்றொன்று, குழந்தை மயக்க நிலைக்குத் தள்ளப்படலாம். மூளையின் ஒரு பகுதி மட்டும் சேதமடைந்த நிலையில் உடலின் ஒரு பக்க கை கால்கள் செயலிழந்துபோகலாம்.

பச்சிளம் குழந்தைகளின் தலை, உடலைவிடப் பெரியதாகவும், தலையின் பாரத்தைத் தாங்க முடியாத வகையில் கழுத்து தசைகள் பலவீனமாகவும் இருக்கும். குழந்தைகளின் மூளையில் உள்ள ரத்த நாளங்கள் மயிரிழைபோன்று மெல்லியதாக இருப்பதால் குலுக்கும்போதும், தூக்கிப் போடும்போதும் தலை திரும்பிக்கொள்ளவோ, முன்னும் பின்னுமாக முறுக்கிக்கொள்ளவோ வாய்ப்புண்டு. இதனால், மூளையின் ரத்த நாளங்கள் மற்றும் நரம்புகளுக்கு அதிகப்படியான அழுத்தம் ஏற்படும். தலை அதிர்கையில், குழந்தையின் மூளையானது மண்டையோட்டில் இங்கும் அங்கும் மோதிக்கொள்ளும். அப்போது, மூளையில் ரத்தக்கசிவும் வீக்கமும் உண்டாகும். ஒரு வயதுக்குட்பட்ட பச்சிளம் குழந்தைகளே இதனால் அதிகமாக பாதிப்படைகிறார்கள்.


## அறிகுறிகள் என்னென்ன?

பாதிக்கப்பட்ட குழந்தையின் வயது, தூக்கிப் பிடிக்கப்பட்ட வேகம், அதன் எண்ணிக்கை போன்றவற்றுக்கேற்ப, இந்த பாதிப்பின் அறிகுறிகள் மாறுபடும். லேசாக அதிர்ச்சியடைந்த குழந்தைகளுக்கு வாந்தி, தொடர்ந்து சத்தமிட்டு அழுவது, பசியின்மை மற்றும் சோர்வு ஏற்படும். ஆனால், அதிகம் அதிர்வு ஏற்பட்ட குழந்தைகளுக்கு வலிப்பு, குறைவான இதயத்துடிப்பு, கேட்கும் திறன் குறைதல், மயக்கம் மற்றும் மந்தம் போன்றவை இருக்கும். நோய் தாக்கப்பட்டதற்கான அறிகுறிகள் உடனே தெரியவராது. பகுதியாகவோ முழுவதுமாகவோ பார்வைக் குறைபாடு, காது கேளாமை, தாமதமான வளர்ச்சி, பேச்சு மற்றும் கற்றல் குறைபாடு, நினைவாற்றல் குறைபாடு, மனவளர்ச்சி குறைபாடு மற்றும் பெருமூளை வாதம் போன்ற குறைபாடுகள் நீண்ட காலத்துக்குப் பிறகுகூட தெரியவரலாம்.

இவ்வாறு பாதிப்புக்கு உள்ளான குழந்தைகளை நரம்பியல் மருத்துவரிடம் அழைத்துச்செல்ல வேண்டும். இந்தப் பிரச்னையை குணப்படுத்துவது சிறிது கடினம். எனினும், சிறிய அளவிலான அதிர்ச்சியை மருந்து மாத்திரைகள் மூலமும், பெரிய அதிர்ச்சியை அறுவை சிகிச்சை, வென்டிலேட்டர் மற்றும் மருந்துகளின் உதவியுடனும் குணப்படுத்திவிடலாம். இந்த நோய் ஏற்படாமல் தடுக்க, இளம் பெற்றோர்களுக்கு தகுந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியம்" என்கிறார் மருத்துவர் செல்வமுத்து குமரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள்தானே தாய்



மலர் தந்தது ஒரு கொடியோ!
மனம் மகிழ அதன் நெடியோ!
மலரே நீ மலர்ந்தது
நிறம் தரவா? மணம் தரவா?
உலரும் என்றதால் மலரே
உலகம் மறந்ததா உன்னை
வாழும் உலகிலே என் சோதரி
நாளும் அணிவாள் மலரே
நீ பார்த்து அவர் சிரித்தாள்
அவள் பார்க்காது போனால்
நான் அழுவேன்
அன்னையின் பின் அவள்
தானே தாய்
உலகம் செய்யும் வினையால்
உலராதே என் மலரே
திலகம் கொண்ட நிலவே
தினமும் வாடதே

ஆறுமுகம் சிவபாதம்
இணுவில்.

## மாறாதோ நெஞ்சம்

புத்தாண்டே வருக
புதிதாய் நன்மைகள் தருக
மனித மனத்தின் வேண்டுதலிது
ஆனால் எம் மனம் மாறாமல்
நன்மைகள் நிகழ்வது எங்ஙனம்
அடுத்தவர் வாழ்வதை பொறுக்கா
மனம் எம்முடையதாச்சே
அயலான் குடும்ப நிம்மதியை
கெடுப்பதும் நாங்கள் தானே
பெண்மையின் கற்பினைக் களங்கப்படுத்த
இழி கதைகள் புனைவதும் எம் செயலே
போதையில் சீரழிந்து சீரழிப்பதும்
கெடுவார் எம் திறனே
இயற்கையின் இயல்பு இருப்பை
சிதைத்து அழிப்பதும் மாந்தர் தானே
உறவும் தெரியாது முறையும் மறந்து
சுயநலப் பேய்களாய்
சுய இச்சை வெறியராய்
ஈனச் செயல் பல புரியும் எமக்கு
தை பிறந்தாலென்ன?
புத்தாண்டு மலர்ந்தாலென்ன?
அழிவுகள் தான் தொடருதே
வாழ்க்கை சீரழிகின்றதே
வாழ்க வளமுடன் என்ற வாழ்த்து
மெய்ப்பட வேண்டுமெனில்
மனங்கள் மாற வேண்டும்
ஆம் எம் மனங்கள் புதிதாக வேண்டும்
தயாரா இதற்கு நாம்?

சி.இ:அன்புதுரை
சம்மட்டியோலை
மானிப்பாய்.

## தீயினிலே

உண்ணும் உணவுகூட
உள் நுழைய மறுக்குதடி
உன் நினைவு தானடி
என் நெஞ்சை இறுக்குதடி

புல் வயல் வெளிகள்
உன் நினைவலைகள்
புரண்டு எழுகின்றேன்
புலம்புகிறேன்

உள்ளம் என் நினைவில் நீ
உயிரில் கலந்துவிட்டாய்
அல்லும் பகலும் கவிதைகளில் நீ
அகண்டு விரிந்து நின்றாய்
சொல்லும் பொருளும் நீ
சோகம் விதைத்து விட்டாய்

கள்ளச் சிரிப்புதனைக் காட்டிவிட்டு
மூங்கில் காடு வழி
உரசிச் சென்றாய்
மூண்டது தீ...
தீயுடன் நான் என் இதயம்
இரண்டும்
இரண்டறக் கலக்கிறது

தீ வளி தீயாகும் போது கூட
நீ சென்ற வழிதனையே பார்க்கிறேன்
நீ சென்றுவிட்டாய்...
மூங்கில்காடு மூண்டு முடிந்துவிட்டது
மூங்கில்கள் புல்லாங்குழலாகிறது
புயல் தென்றலாகிறது
தென்றலுடன் புல்லாங்குழல் சங்கமமாகிறது

புல்லாங்குழலின் ரீங்காரம்
என் இதயம் சொல்வது போல்
உன் பெயரையே உச்சரிக்கிறது

மாவை.நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 680



## சேர் அடி மண்

ஒரு கால் கொண்ட ஏரிணை
இரு கால் மனிதன் நால் கால் அடி மாட்டின்
இரண்டின் எட்டு காலின் மிதிப்பட்ட
நிலத்தில் பன்னிரு மாதமும்
பசியார நெல்விதைத்து
பதினாறு திங்கள் வெய்யிலில் காய்ந்த
இவ்விவசாயிக்கு
உணவுக்கு ஏன்? இந்தப் போராட்டம்....!

லோ .கம்சனா, யாழ்ப்பாணம்

## நஞ்சுண்போர்

மண் வளமாகி பண்பட
கால் நடைகள் உதவியுடன்
விளைந்த உழவர் தம்
உணவுப் பொருட்களால்
தொற்றா நோய்கள் இல்லை
நவீனத்திற்கு மாறினோம்
விளைநிலம் மலடாகியது
உணவுகள் நஞ்சாகின
நாம் இன்று நோயாளிகளாய்...?

சி.இ. அன்புத்துரை,சம்மட்டியோலை
மானிப்பாய்

## கடைசி வரன்

வேல் வேந்தர் நோக்கும் கை
உழுதுண்டு வாழ்வரே வாழ்வார்
ஏர் பின் உலகம் என்றெல்லாம்
ஏடுகள் உன்னைப் புகழ்ந்தாலும்
கல்யாண சந்தையில் நீ
கடைசி வரன் தான்.

பி.மதுஷ்சன் ,தையிட்டி

## பசி தீர்க்கும் காமதேனு

ஏர் பூட்டி வயற்காட்டை உழுது
எருப் போட்டு விதை விதைத்து
உடல் உழைப்பில் வியர்வை சிந்தி
நோய் நொடியின்றி வாழ்ந்து
பஞ்சம் பசி போக்கி பாரினிலே காம தேனுவாய்
உயர்ந்து நிற்கும் அந்தக் கால விவசாயி...

ஆ.செல்வி
திருநாவலூர்

## மௌனத்தின் தேடல்- 681



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## உழவர் பெருமக்கள்

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு
ஏர் பிடித்து வயல் உழுது நெல் விதைத்து
பாரிலுள்ள உயிர்களின் பசி போக்க
உணவளிக்கும் உன்னதமான உழவர்
பெருமக்கள் உலகிற்கு உயிர் கொடுத்தோரே

சி. மகாலட்சுமி ,கொக்குவில்

## சாரத்தியம்

வீதியில் செல்வோர் பதறியடிக்க- அவ்
வாகனத்தில் பயணிப்போர் பயத்தால் நடுங்க
நீயாநானா பந்தயம் பிடித்து சாகச
வித்தை காட்டும் சாரத்தியத்தால்
நிலை தடுமாறி வீதியால் செல்லும்
வாகனமும் ஒன்றுடன் ஒன்று
முட்டி மோதி அக்குவேறு, ஆனிவேறாய்
கழண்ட நிலையில் நடுத்தெரு தன்னில்

சி. மகாலட்சுமி,கொக்குவில்

## எம்மினமே..!

ஏர் பிடித்த தோழனுக்கு
எருதுகள் துணையிருக்க
எங்கள் விளை நிலத்தின்
எல்லைகள் நீண்டிருக்க
ஊர் வாழ உழைக்கின்ற
உற்சாக உடலிருக்க
வளமித எம்மண்ணில்- இனியும்
வறுமைக்கஞ்சி வழங்கிடலாமோ?

சாந்தையூர் வினிஸ். பண்டத்தரிப்பு

## அச்சாணி உழவனே

காராளர் காளையுடன்
ஏரோடும் அவ்வூ ரில்
வயல் விளையும் பசி ஓடும்
அறம் சிறக்கும் மறம் ஓடும்
ஊர் இழுக்கும் தேர் ஓடும்
உருளும் இந்த உலகின்
அச்சாணி ஏழை உழவனே

பிரமன்.கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 71

# கடல்புறா

## நீர் மோகினி

கடைசியாக தலையைத் துவட்ட முயன்று மணல் வெளிக்கு முதுகைக் காட்டிக்கொண்டு கடல்நீர்ப் புறம் திரும்பி மேலாடையைப் பிழிந்து தலையைத் துவட்ட முயன்றாள். தலையில் வைக்கும் தருணத்தில் துவட்ட வேண்டிய மேலாடை கை தவறிக் கீழே விழுந்தது. அதை எடுத்து நீட்டியது ஒரு கரம். அதிர்ச்சியுற்று திரும்பினாள் மஞ்சளழகி. முகத்தை வேறு புறம் திருப்பிக்கொண்டு கைமட்டும் ஆடையை நீட்ட நின்று கொண்டிருந்தான் இளைய பல்லவன்.

### நீர் மோகினி

துணியை எடுத்து கரம் துவட்டிக்கொள் எனத் துணிந்து நீள, துணி வற்ற வீர முகம் வேறு புறம் திரும்பி நோக்க் உறுதியுள்ள கால்களிலும் ஓரளவு சலனம் காண, எங்கோ பார்ப்பவன்போல் பரம சங்கடத்துடன் நின்றிந்த இளையபல்லவனைக் கண்டதும் மஞ்சளழகி வெட்கம், திகில், சஞ்சலம் முதலிய பலவித உணர்ச்சிகளுக்கு இலக்காகி, அவன் நீட்டிய மேலாடையைச் சரேலென அவன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு, நெடுங்கடலின் நீரப்பரப்பை நோக்கித் திரும்பி, சிறிது வளைந்தும், ஒடுங்கியும் நின்றாள். அந்த "மெல்லியல்" வளைந்தபோது பார்க்கவும் அஞ்சினான் "அப்பணையினும் உயர்ந்த தோளான்" என்றால் அதற்குக் காரணங்கள் ஆயிரமாயிரம் இருந் தன. எல்லாக் காரணங்களையும் விட உயர்குடியில் பிறந்தவர்களுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பாடு பெரும் காரணமாயிற்று இளையபல்லவனின் அந்தத் துணி வற்ற நிலைக்கு. அழகை ஊன்றிப் பார்ப்பதும் எளிது. புலன்களுக்கு வழிவிட்டு மனத்தைப் புண்படுத்திக் கொள்வதும் எளிது. ஆனால் அவற்றுக்கு அறத்தின் வேலியிட்டுப் பயன்படுத்திக் கொள்வது மிகக்கடினம். பார்ப்பதைவிட பார்க்காததில் பெருமை இருப்பதைப் பெரியோர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 'பிறன்மனை நோக்காத பேராண்மை' என்று வள்ளுவரும் சொல்லுவார். பிறன் மனைவியை நோக்காத திடசித்த முள்ளவன் எவனோ அவனே பேராண்மை படைத்தவன் என்பது வள்ளுவர் கருத்து.

அந்தக் கருத்து நாம் உரிமை கொண்டாட முடியாத எந்தப் பெண்ணைப் பற்றியும் பொருந்தும். அத்தகைய சிறந்த ஆண் மக்கள் வர்க்கத்தில் சேர்ந்தவனான இளையபல்லவன், எழிலின் இருப்பிடமாக விளங்கிய மஞ்சளழகி அத்தனை அருகில் வந்ததும் அவன் இதயத்தைப் பண்பாடு விளைவித்த அச்சம் பலமாகச் சூழ்ந்து கொண்டது. முந்திய இரவும் அன்னைய காலையும் எழுப்பிய இதயக் கிளர்ச்சியை அந்தப் பண்பாடு பெரும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே அவன் கோட்டைப் புறம் திரும்பிய தலையை மஞ்சளழகியிருந்த புறத்துக்குத் திருப்பவே இல்லை. அப்படித்திரும்பாத அந்த நேரத்திலும் அத்தனைக் கட்டுப்பாட்டிலும் மனம் சபலத்தின் சிற்றலைகளை அவன் இதயத்தில் மெல்ல மெல்ல மோத விட்டுக் கொண்டுதான் இருந்தது.

மஞ்சளகியை அந்தச் சமயத்தில் அந்த நிலையில் சந்திப்போம் என்பதைக் கனவிலும் இளைய பல்லன் நினைத்துப் பார்க்காமலே அன்று காலை அந்தக் கடற்கரையை அடைந்தானானாலும், அவளைப் பற்றிய வேறு கனவுகள் மட்டும் அவன் மனத்தை முதலிலிருந்து அலைக்கழித்துக் கொண்டுதானிருந்தன. முதல்நாளிரவு மஞ்சளகிக்கு எப்படி உறக்கமும் உணவும் சரிவரப் பிடிக்கவில்லையோ அப்படித் தானிருந்தது இளையபல்லவன் நிலையும். பஞ்சணையில் படுத்த நிலையில் அவன் பாலூர்ப் பொருந்துறையையும் கடாரத்துப் பைங்கிளிளையும் தனக்கு இரு பெண்களாலும் ஏற்பட்டுவிட்ட பெரும் பொறுப்புகளையும் எண்ணினாலும் திரும்பத் திரும்ப இரவு நடன நிகழ்ச்சியும் மஞ்சளழகியும் இணையற்ற எழில்களும் எழில்களின் கருத்த முிக்கும் அசைவுகளும் அவன் சித்ததிலே வலம் வந்தன.

(தொடரும்...)

---

# எனது பார்வையில் கண்ணதாசன்

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 17

எழுத்துக்காக ஒரு கவிஞன் தன்னையறியாமல் செய்த "தியாகம்" என்றே அதற்குப் பெயர் சூட்ட எதிர்காலம் பிரியப்படலாம்.

மனிதனின் இச்சைகளை வாலிபம் நியாயப்படுத்துகிறது.

ஞானத்தின் எல்லையில் அது திருத்தப்படுகிறது.

**"காமுகனும் மாண்டான் கடவுள்**
**நெறிபேசும்**
**மாமுனியும் மாண்டான் மற்றிலே**
**யார்பெரியார்?**
**நாமுடலைப் பார்போம்**



**நமதுடலைப் பெண்பார்ப்பாள்**
**சாமிநமது சுகச் சரித்திரத்தைப்**
**பார்க்கட்டும்."**

என்று ஞானத் தூண்டிலில் சிக்காத ஒரு மீன் சுதந்திரமாத் துள்ளுகிறது.

ரத்தம் வற்றியபோது சத்தம் அடங்குகிறது.

**"பொன்னிநதி அவ்வளவு**
**போனரத்தம் போன பின்னர்**
**கன்னியரை ஏசுதடா உள்ளம் – இது**
**காலிடறி யானைவிழும் பள்ளம்."**

இங்கே கண்ணதாசனின் உருவத்தில் மாணிக்கவாசகரும் அருணகிரியும் மாறுவேஷம் போட்டுக் கொண்டு பேசுவதாகவே எனக்குக் கேட்கிறது.

கண்ணதாசனின் அரசியல் முரண்பாடுகளையும் கருத்து முரண்பாடுகளையும் காலம் மறந்துவிடும்.

அவரதுஎழுத்துக்களின்நீண்டபயணத்தில் அவர் கருத்து உலகத்திற்குத் தந்தவைகளை மட்டுமே காலம் கணக்கில் வைத்துக் கொள்ளும்.

தமிழ் இலக்கியத்திற்கு மரபு மாறாத ஒரு வரலாறு உண்டு. அந்த நீண்ட நெடிய வரலாற்றின் கடைசிக் கவிஞன் கண்ணதாசன்.

அவருக்குப் பிறகு தமிழ் இலக்கிய வரலாறு ஒரு புதிய திசையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது.

ஆனால், கண்ணதாசன் என்ற புள்ளியிலிருந்துதான் அந்தத் திசையில் மாற்றம் தீர்மானிக்கப்படுகிறது.

அவர் படைத்த இலக்கியங்களை விடவும், எழுதிய பாடல்களின் எண்ணிக்கைகள் அதிகம்.

அந்தப் பாடல்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் காற்றை ஜெயித்துக் கொண்டிருக்கும் என்று நாம் கட்டியம் கூற முடியாது.

ஆனால் கவிதைகளின் சுகத்திற்காக மட்டுமே பூஜிக்கப்பட வேண்டிய அவரது கவிதைகள் காலத்தின் முதுகில் மேல் சவாரி செய்து கொண்டே செல்லுமென்பது சத்தியம்.

### பட்டிக்காட்டுக் குயில்கள்

சில நேரங்களில் மனசு ஈரப்பசையில்லாமல் வறண்டு விடுகிறது.

உள் மனம் பாளம் பாளமாய்ப் பிளந்து விட்டது போன்ற ஒரு பிரமை.

அந்த நேரத்திலெல்லாம் மனத்தைக் காயப்படுத்தாத ஒரு மழை வேண்டியிருக்கிறது. அந்த நிமிஷங்களில்தான் நாட்டுப் பாடல்களின் தொகுப்புக்குள் நான் தொலைந்து போகிறேன்.

ராஜ சபைகளில் வாசிக்கப்பட்ட சில மடட்டுச் செய்யுள்களை விட வெயிலில் வேர்வைச் சட்டைகளை அணிந்து உழுது கொண்டிருக்கிறானே, அந்த எழுத்தறிவில்லாத கலப்பைப் புலவனின் கவிதை எத்தனையோ மடங்கு இதமாக இருக்கிறது.

தவமாய்த் தவமிருந்து ஒரு தங்க மகனைப் பெற்றாளம் தாயொருத்தி இனிமேல்

**"பட்டமரம் பாலூறும்**
**பாகற்காய் தேனூறும்**
**உளுத்தமரம் தான் தழையும்**
**உத்தமியாய் வாசலிலே."**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

359

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நிறைகுறைப்பு ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம்

ஒருவர் அளவான உடல் நிறையைப் பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.


சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றிக்குப் பதிலாக இனிப்பூட்டிகள்

அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம். இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும் ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது. நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்தமுடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்தமாட்டாது.

இதேபோன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவுவகைகளும், பட்டர், மாஜரின் போன்றவற்றையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன. நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன. மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல் வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவுவகைகள், எண்ணெய் சேர்த்து செய்யும் உணவு வகைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம்

அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.

நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி




உண்ணக்கூடிய உணவுவகைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பாசி, வாழைப்பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லாவிதமான மரக்கறி வகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயிற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பாணங்களான மோர், இனிப்பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசிக் கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடலாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதியளவு உணவில் சேர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். இவை எமக்கு அதிகளவு புரதத்தை வழங்குவதுடன் பசியை கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

நிறைகுறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக அமையும். உணவு வீணாகப்போகிறதே என்ற உணர்வில் மிகுதி உணவுகளை உண்ணும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளைகளில் மிகுதி உணவை உண்டால் உடம்புதான் வீணாகிப் போகும்.

பிறரின் வற்புறுத்தலிற்காக உணவு உண்ணுவதையும் உணவு உண்ணுமாறு ஒருவரை வற்புறுத்துவதை ஒரு உபசார முறையாகக் கடைப் பிடிப்பதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். பசிக்காத வேளையில் ஒருவரை உண்ணுமாறு வற்புறுத்துவது அவரை நோயாளி ஆக்கும் படிமுறையாக அமைத்து விடும். உணவு அருந்துவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாக பழங்களை உண்டு அதன் பின்னர் உணவை அருந்துதல் நல்லது. இது உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் போதுமான உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

உணவைஆறுதலாக உண்ணப்பழக வேண்டும். இது குறைந்தளவு உணவுடன் பசியைப் போக்கவும் போதுமான அளவு உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்தவும் உதவும். சாப்பாட்டுக் கோப்பைகளையும் கரண்டிகளையும் சிறியனவாக தெரிவுசெய்து வைத்திருப்பது பயன் தரும்.

இதன்மூலம் அளவுக்கதிகமான உணவு உட்கொள்ளப்படுவதை குறைத்துக் கொள்ள முடியும். தேநீர் கோப்பையையும் சிறியதாக தெரிவு செய்து வைத்திருப்பது நல்லது.

தினமும் ஒரே வகையான உணவு வகைகளை உண்பதிலும் பார்க்க நிறத்தாலும், சுவையாலும், வாசனையாலும் மாறுபடும் வெவ்வேறு வகையான உணவுகளை மாறிமாறி உண்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும், புத்தாக்கத்தையும் தருவதுடன் பசியைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான நிறை குறைப்பிற்கு வழிவகுக்கும்.

ஒரே வகையான உணவு வகைகளை உண்ணுவதன் மூலம் எல்லா வகையான சத்துக்களையும் பெற்றுக்கொள்ள முடியாது.

முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் பெயர்போனவர்கள் தியாகத்திற்கு சிகரம் வைத்தவர்கள் சேமிப்பிற்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரைகண்டவர்கள், நினைத்த இலக்கை அடையும் வரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல் பருத்து உயிர்விடுவதா?

நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற் பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப் படுத்த திடசங்கற்பம் எடுப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்கள் மீது பழி சுமத்த அரசாங்கத்துக்கு உரிமையில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளின் காரணமாகவே மக்களுக்கு வீதிக்கிறங்கி போராட வேண்டிய நிலைமைஏற்பட்டுள்ளது.

அதற்கு ஊடகங்கள் மீது குற்றஞ்சுமத்துவது பொறுத்தமற்றது. ஊடகங்கள் மீது பழி சுமத்துவதற்கு அரசாங்கத்துக்கு உரிமையும் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஊடகங்களாலேயே நாடு இந்த நிலைமையை அடைந்துள்ளதாக அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். உரத்தட்டுப்பாடு ஏற்பட்டமையும் , அத்தியாவசிய பொருட்களுக்கு வரிசையில் நிற்க வேண்டி ஏற்பட்டமையும் ஊடகங்களால் ஏற்பட்ட விளைவுகளா என அந்த அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன்.

தன்னிச்சையான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாகவே மக்களுக்கு வீதிக்கு இறங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைத்தது அரசாங்கமேயன்றி , ஊடகங்கள் அல்ல. இந்த அரசாங்கத்துக்கு ஊடகங்கள் மீது பழி சுமத்துவதற்கு எந்த உரிமையும் இல்லை.

ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக வேண்டும் என்று நாம் கூறவில்லை. ஆனால் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொண்டு, தீர்மானங்களை எடுத்து அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு மக்களின் துயரம் எவ்வாறு புரியும் எனத் தெரிவித்தார். (4)

# 8 ஆம் திகதி முதல் 11 வரை பாராளுமன்றம் கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம்நாளை மறுதினம் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை கூடவுள்ளது. இது தொடர்பான தீர்மானம் கடந்த ஜூலை 21 ஆம் திகதி இடம் பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டு வரப்படும் பிரேரணைக்கமைய 2023ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 9ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், 5 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்படும்பிரேரணைக்கமைய சபை ஒத்திவைப்பு வேளையின்போதான விவாதம் இடம் பெறவுள்ளது.

ஓகஸ்ட் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர் கொள்ளும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற வுள்ளது.

ஓகஸ்ட் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை தனியார் உறுப்பினர் பிரேரணைகள் பிரேரிக்கப்பட வுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# கொழும்பில் குழுமோதல் குடும்பஸ்தர் அடித்துக்கொலை

(கொழும்பு)

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - பாதுக்கை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

29 வயதுடைய எச்.எம். முஷாரப் என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் நால்வரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(4)

# மோட்டார் சைக்கிள் விபத்து கணவன் பலி மனைவி காயம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவன் பலியானதுடன் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

அம்பாந்தோட்டை, சூரிய வெவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய தம்பதியினரே விபத்தில் சிக்கியுள்ளனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதி யோரத்தில் நின்ற மரத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 52 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

48 வயதுடைய மனைவி படுகாயங்களுடன் சூரிய வெவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)


**ST. JOHN'S COLLEGE, JAFFNA**
**VACANCY**

Applications are hereby invited from qualified persons for the following vacancy:

➤ Teacher - Political Science - A/L

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 18 August 2023 to the address below:

The Principal
St. John's College,
Jaffna.

(C-7013)



**மணமகள் தேவை**

1993. யாழ்.கிறிஸ்தவம்.திருவாதிரை. Doctor, யாழ்ப்பாணம் மணமகன் பதிவு # 9406.தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. தற்போதைய பதிவுகளுக்கு 50% கழிவு. WWW. EQ Marriage Service.com இணைய வழி திருமண சேவை.பம்பலப்பிட்டி. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401.

**மணமகள் தேவை**

1992. யாழ்.இந்து.விசாகம். Accountant, Canada. மணமகன் பதிவு # 9142.தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. தற்போதைய பதிவுகளுக்கு 50% கழிவு. WWW. EQ Marriage Service.com இணைய வழி திருமண சேவை.பம்பலப்பிட்டி. கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401.

**மணமகன் தேவை**

1994. யாழ்.இந்து.உத்தரம்.HR Manager. மானிப்பாய். Divorced மணமகள் பதிவு # 7945.தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. தற்போதைய பதிவுகளுக்கு 50% கழிவு. WWW. EQ Marriage Service.com இணைய வழி திருமண சேவை.பம்பலப்பிட்டி.கொழும்பு 04. அழையுங்கள் 076 664 9401.


# கடிதம் எழுதி வைத்துவிட்டு மருத்துவர் உயிர்மாய்ப்பு

(கொழும்பு)

மொணராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் 42 வயதுடைய வைத்தியர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டுள்ளார்.

வெலியாய பகுதியில் அமைந்துள்ள குறித்த வைத்தியரின் பிரத்தியேக வீட்டிலேயே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியர் தற்கொலை செய்துக்கொள்வதற்கு முன்னதாக கடிதம் ஒன்றினையும் எழுதி வைத்துள்ளார்.

தன்னுடைய இந்த தற்கொலை தீர்மானத்துக்காக எவரையும் சந்தேகிக்க வேண்டாம் எனவும் அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்கொலைக்கான வேறு காரணங்கள் கண்டறியப்படாத நிலையில், பிரேத பரிசோதனையின் போது தற்கொலை செய்துக்கொண்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (4)


**Heritage Agri Private Limited**
**பதவி வெற்றிடங்கள்**

இயக்கச்சியில் அமைந்துள்ள சேதன விவசாய முறையில் முருங்கை இலை பயிரிட்டு நவீன இயந்திர மயமாக்கல் மூலம் முருங்கை இலை தாள் தயாரித்து tablet மற்றும் Capsule வடிவில் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

**வேளாண் கள மேற்பார்வையாளர் - பயிலுனர்**
**Trainee Agriculture Field Supervisors**

விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடுள்ள தங்களின் எதிர் காலத்தை இத்துறையில் உருவாக்கி கொள்ளும் எண்ணம் கொண்ட க.பொ.த உயர்தரம் சித்தி எய்திய அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

தேர்ந்தெடுக்கப் படும் பயிலுனருக்கு நவீன சேதன விவசாய முறையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின் பின்னர் எமது ஸ்தாபனத்தில் நிரந்தர வேலையில் பணி நியமனம் செய்யப்படுவர்.

**உற்பத்தி மேற்பார்வையாளர்.**
**Production Supervisors**

NVQ தகைமையுள்ள Mechanical அல்லது Electrical தொழில்நுட்பவியலாளர்கள் 2 அல்லது 3 வருட அனுபவத்துடன் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் மேற்பார்வையாளர்களுக்கு நவீன இயந்திரங்களின் செயல்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு நிரந்தர பணி நியமனம் செய்யப்படுவர்.

விண்ணப்பங்களை பின் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

QUICK ADS

மனித வள மேலாளர்
ஹெரிடேஜ் அக்ரி பிரைவேட் லிமிடெட்
வாழைத்தோட்டம்
இயக்கச்சி.

HR Manager
Heritage Agri Private Limited
Valaiththoddam
Iyakkachchi

மின்னஞ்சல் : hrdlk@isfindustries.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்
# இம்ரான்கானுக்கு 3 வருட சிறை


(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

மேலும் 5 ஆண்டுகள் தகுதி நீக்கம், ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்தும் பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதமராக இருந்த போது பெற்ற பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல் விற்பனை செய்தது தொடர்பான வழக்கில் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்ரான் கான் ஒரு நேர்மையற்ற மனிதர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் இஸ்லாமாபாத் ஜஜி இம்ரான் கானை உடனடியாக கைது செய்யவும் நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.(4)



# மணிப்பூரில் மீண்டும் வெடித்தது கலவரம்!

## 3 பேர் சுட்டுக்கொலை



(டில்லி)

மணிப்பூரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மீண்டும் புதிதாக வெடித்தக் கலவரத்தில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்கள் மூவரும் மைத்தேயி சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக குகி சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

க்வாக்டா பகுதியில் தான் இந்தக் கலவரம் நடந்துள்ளது. கலவரத்தால் ஊரடங்கு தளர்த்தப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் அது வாபஸ் பெறப்பட்டுள்ளது.

குறிப்பாக இம்பால் கிழக்கு மற்றும் இம்பால் மேற்கு பகுதிகளில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு திரும்பப்பெறப்பட்டுள்ளது.

இது குறித்து பிஷ்ணுபூர் பொலிஸ் தரப்பில், மத்தியப் படைகளின் பாதுகாப்பு வளையத்தில் இருந்த பாதுகாப்புப் பகுதியில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் குவாக்டா பகுதிக்குள் கலவரக்காரர்கள் நுழைந்தனர். பாதுகாக்கப்பட்ட பகுதியைத் தாண்டி வந்த சிலர் மைத்தேயி மக்கள் வசிக்கும் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து மீண்டும் கலவரம் மூண்டுள்ளது. இதில் மைத்தேயி சமூகத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டனர். குகி சமூகத்தினர் வீடுகள் பல எரிக்கப்பட்டுள்ளன. சம்பவ பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# உலகப்புகழ் பெற்ற ஸ்ரீரங்கம் கோயில் கோபுரம் இடிந்து விழுந்ததால் பரபரப்பு



(டில்லி)

உலகப்புகழ் பெற்ற வைஸ்ணவ தலங்களுள் முதன்மையான தலமான திருச்சி ஸ்ரீரங்கம் கோயிலின் கிழக்கு நுழைவு வாயிலில் உள்ள கோபுரத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நுழைவு வாயிலில் இடிந்து விழுந்தது நள்ளிரவு நேரம் என்பதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

ஸ்ரீரங்கம் கோவிலின் கிழக்கு கோபுர சுவரில் ஏற்கனவே விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் இடிந்து விழுந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத நேரம் என்பதால் அசம்பாவிதம் ஏதும் ஏற்படவில்லை.

நேற்று முன்தினம் மாலை திருச்சி பகுதிகளில் 30 நிமிடங்கள் வரை நல்ல மழை பெய்தது.

இதனால் விரிசல் அதிகமான நிலையில் முதல் நிலை கோபுரத்தின் சுவர் மளமளவென இடிந்து விழுந்தது.

இந்நிலையில் இடிந்த கோபுர சுவரினை முழுவதுமாக புதிதாக கட்டித்தர வேண்டுமென அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை உலகளவில் இரண்டாவது பெரிய விஷ்ணு கோவில் ஸ்ரீரங்கம். வைணவர்களின் 108 திவ்ய தேசங்களில் முதன்மையானது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4)

# மலைப்பாம்புகளைக் கொன்றால் பெருந் தொகைப்பணம்

## புளோரிடாவில் வினோத போட்டி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் பாம்பு பிடித்து கொல்லும் ஒரு வினோத போட்டி நடைபெறுகிறது. இந்த போட்டிக்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் போட்டியாளர்கள் ஆர்வமாக வந்து பங்கேற்கின்றனர்.

இப்போட்டியில் பங்கு பெறும் போட்டியாளர்கள், பர்மிய வகை மலைப்பாம்புகளை பிடித்து கொல்ல வேண்டும். இதில், யார் அதிக பாம்புகளை கொல்கிறார்களோ அவர்கள் வெற்றியாளராக கருதப்படுகின்றனர்.

16 அடி வரை நீளமுள்ள இந்த மலைப்பாம்புகளை பிடிக்க அதிக திறனும் துணிச்சலும் தேவைப்படும். ஆனாலும், ஆபத்தான இந்த போட்டியில் பங்கு பெறும் போட்டியாளர்கள், இதில் கிடைக்கும் புகழ் மற்றும் பணத்தால் ஈர்க்கப்பட்டு கலந்துகொள்கின்றனர். போட்டியில் வெல்பவர்களுக்கு, பரிசுத் தொகை சுமார் ரூ.25 லட்சம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புளோரிடாவின் தெற்கு பகுதியில் 20 "ஆயிரம் சதுர கி.மீ பரப்பளவில் உள்ள எவர்க்ளேட்ஸ் சதுப்புநில பகுதி. அங்கு அதிகமாக உலவும் பர்மிய மலைப்பாம்புகள் பிற உயிரினங்களை கொன்று, சுற்றுசூழல் சமநிலையை சேதப்படுத்துவதாகவும், அதனால் இந்த போட்டி அவசியமானது என உள்ளூர் வன மற்றும் இயற்கை பாதுகாவலர்கள் கூறுகின்றனர். (4)

# தாய்லாந்தில் ரயில் விபத்து 8 பேர் பரிதாப பலி!



(பாங்கொக்)

தாய்லாந்தில் லொறி மீது ரயில் மோதியதில் 8 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் தாய்லாந்தின் சஷொன்சொ மாகாணத்தில் உள்ள முவாங் மாவட்டத்தில் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு லொறி ஒன்று சென்று கொண்டு இருந்தது.

அப்போது ரயில்வே தண்டவாளத்தை லொறி கடக்க முயன்றது ஆனால் அதிவேகமாக வந்த ரயில் லொறிமீது மோதியது.

இந்த விபத்தில் லொறி தண்டவாளத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டு பலத்த சேதமடைந்தது.

இந்த விபத்தில் 3 பெண்கள், 5 ஆண்கள் உட்பட 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அத்துடன் 4 பேர் படுகாயம் அடைந்துள்ள நிலையில் அதில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் உயிரிழந்தோர் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் விபத்து குறித்து விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையும் நல்லெண்ணமும் இருக்கின்றபோதெல்லாம் இறைவனின் உதவியும் உள்ளது.
~ ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவை இப்போது இருந்திருந்தால்...

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்கள் எந்தவகையிலும் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாத அவல நிலைக்கு ஆளாகினர்.

அதேநேரம் தமிழர் தரப்புகள் கன்னை பிரிந்து நின்றன.

அரச தரப்புடன் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மறைமுகமான தொடர்பு உண்டென்ற ஊகங்கள் தமிழ் மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தின.

எங்களின் தியாகம் இவ்விதமாயிற்றே என்ற ஏக்கமும் கவலையும் தமிழ்ப் பற்றாளர்களை வாட்டியது.

இந்த இடத்தில்தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு இயங்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

அதேவேளை கன்னை பிரிந்து நிற்கும் தமிழ் அரசியல் தரப்புகளை ஒன்றுபடுத்த வேண்டிய தேவையும் இருந்தது.

இந்நிலையில்தான் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் உருவெடுத்தது.

தமிழ் மக்கள் பேரவையில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரசன்னமும் இருந்தன.

போருக்குப் பின்பான சூழ்நிலையில் இத்தகைய மக்கள் இயக்கம் உருவாக வேண்டும். அவ்வாறு உருவாகினால் மட்டுமே தமிழினம் தனது உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க முடியும் என்ற யதார்த்தத்தை தமிழ்ப் புத்திஜீவிகள் முன்வைத்தனர்.

எழுக தமிழ் எனும் எழுச்சிப் பேரணி நடைபெற்றது. வரலாறு காணாத அளவில் தமிழ் மக்கள் அந்தப் பேரணியில் திரண்டனர்.

அன்றைய நாளில் வடக்குக் கிழக்கு முழுவதும் பூரண கதவடைப்பு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவை ஒரு பெரும் மக்கள் இயக்கம் எனுமளவில் நம்பிக்கையோடு நகர்ந்தது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பது வகுக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அதன் வெளிப்படுத்தலும் இடம்பெற்றது.

இவ்வாறாக அரசியல், கல்வி கலாசாரம், பொருளாதாரம், காணி என பல்பரிமாணங்களில் உபகுழுக்களை அமைத்து தனது பணியை முன்னெடுத்த தமிழ் மக்கள் பேரவையை சில தரப்புகள் கடுமையாகச் சாடின.

சில ஊடகங்கள் தர்மத்தையும் மறந்து தங்கள் சொந்த நலனுக்காக பேரவையைத் தூற்றின.

ஈற்றில் உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பதுபோல தமிழ் மக்கள் பேரவைக்கும் ஈனம் இழைக்கப்பட்டது.

தூய நோக்கத்தோடு பேரவையை உருவாக்கியவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். பேரவையை வேரறுத்தவர்கள் அது தமக்கு வெற்றி என ஆர்ப்பரித்தனர்.

ஆனால் இன்று தமிழ் மக்கள் பேரவை இருந்திருந்தால், இப்போது நடக்கின்ற ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக தமிழ் மக்கள் திரண்டிருப்பர்.

அரச நிறுவனங்கள் செயலிழந்திருக்கும். தொல்லியல் திணைக்களம் சுற்றிவளைக்கப்பட்டிருக்கும். அது கண்டு உலகம் வியந்திருக்கும்.

என்ன செய்வது பத்துப் பதினைந்து பேருடன் போராட்டம் நடத்திப் பழகிக் கொண்ட நம் தமிழ் அரசியலில் இனியொரு எழுக தமிழ் எழுச்சியைக் காண்பது முடியாத காரியமே.

# மருந்து கொள்வனவை நிறுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

அவசர மருந்து கொள்வனவுகளை எதிர்வரும் சில மாதங்களுக்குள் முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டின் மருந்துத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் மாத்திரம் அவசர கொள்வனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்குள் இருந்த பிரச்சினைகள் தற்போது முற்றாக தீர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

# அவசர தொலைபேசி இலக்கத்தை தவறாக பயன்படுத்தினால்

## அபராதத்துடன் சிறைத்தண்டனை

(கொழும்பு)

119 அவசர தொலைபேசி இலக்கத்தை தவறாகப் பயன்படுத்துபவர்கள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்கள் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

119 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பெடுத்து தவறான தகவல்களை வேண்டுமென்று வழங்குபவர்கள் அல்லது அவசர தொலைபேசி இலக்கத்தை தவறாகப் பயன்படுத்துபவர்கள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த அவசர இலக்கமானது 24 மணி நேரமும் இயங்குவதால் நாளாந்தம் சுமார் 3,000 முதல் 3,500 அழைப்புகள் பெறப்படுவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

### வலி.வடக்கு பிரதேச சபையின்

# முன்னாள் உறுப்பினர் மீது தாக்குதல் சம்பவம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன் (வயது 44) மீது நேற்று தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்கல் தொடர்பாக தெரிய வருவது.

சுன்னாகம் ஐயனார் கோவில் பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் புலம்பெயர் மக்களின் உதவியில் குழாய்க்கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண் தலைமைத்துவ குடும்பத்தின் அயல் வீட்டுக்காரர் குழாய் அமைத்ததால் தன்னுடைய வீட்டு கிணறு பாதிப்புடைகின்றது என தெரிவித்து பிரதேச சபை உறுப்பினர் மீது கடும் தாக்கல் நடத்தியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பிரதேச உறுப்பினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததோடு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இத்தாக்குதல் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,104)

# மலையகப் பிரதிநிதிகளை சந்திக்கின்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு அடுத்தவாரம் இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் எம்.பிக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி வடிவேல் சுரேஷ் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மலையக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் உரிமைசார் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையகப் பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக 3000 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

இந்த நிதியை எந்தெந்தத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும், இது தொடர்பான கட்சிகளின் யோசனைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

மேலும் இந்த விடயம் தொடர்பில் அனைத்து மலையகப் பிரதிநிதிகளையும் ஒரே நேரத்தில் சந்திக்குமாறு ஜனாதிபதியிடம் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நீர் தொட்டிக்குள் தவறுதலாக விழுந்த 3 வயது குழந்தை மரணம்

தண்ணீர்த் தொட்டிக்குள் தவறி விழுந்து மூன்று வயது ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்தப் பரிதாபச் சம்பவம் கம்பஹா மாவட்டம் வத்தளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை திடீரெனக் காணாமல்போயுள்ளது.

பெற்றோர் அவரைத் தேடியபோது குறித்த குழந்தை நீர் நிரம்பிய தொட்டிக்குள் விழுந்து கிடந்துள்ளது.

குழந்தையைப் பெற்றோர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

ராகம வைத்தியசாலையில் குழந்தையின் சடலம் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

### 2 வாள்களுடன்

# கோண்டாவில் மேற்கில் இளைஞன் கைது

வீட்டு சுவாமியறையில் 2 வாள்களை வைத்திருந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கோண்டாவில் மேற்கு, புகையிரத நிலைய வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து இளைஞன் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று மாலை 6 மணி அளவில் வீட்டை சோதனையிட்டு, சுவாமியறையில் வைக்கப்பட்டிருந்த 2 வாள்களையும் மீட்டனர். கைது செய்யப்பட்ட இளைஞன், மேலதிக் விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான இளைஞனிடம் நடத்தப்பட்ட விசாரணையில், சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் கோண்டாவில் கிழக்கு ஐயப்பன் ஆலய வருடாந்த உற்சவத்தின் சமய சடங்குகளுக்காக மேற்படி வாள்களை கொள்வனவு செய்தது தெரியவந்துள்ளது. (ம-7)

# மெய்வல்லுனர் விழா


பொற்பதி அறிவாலயம் நடாத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 38 ஆவது மெய்வல்லுனர் விழாவானது இன்று பிப 2.00 மணியளவில் பொற்பதி வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அறிவாலய தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் உயர்திரு. க.தேவராஜா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்திற்கு பின்னர் வட-கிழக்கில் 83 விகாரைகளை புதிதாக கட்டியுள்ளனர்

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**2010 ஆம் ஆண்டுக்குப் பின் வடக்கு கிழக்கில் 83 இடங்களில் விகாரையைக் கட்டியுள்ளனர். உண்மையைச் சொன்ன வரலாற்றாசிரியர்களை புறக்கணித்து பொய்களைப் புனைந்து பொய்களுக்கூடாக இந் நாட்டிலுள்ள தமிழ் மக்களை பூர்வீகக் குடிகள் இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று சுழிபுரத்தில் போராட்டமொன்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்கள் வாழும் இடங்களைச் சிங்களமயப்படுத்துவதற்காக ஆரம்பத்தில் யுத்தத்தின் மூலமாக தமிழர்களை அழித்து நிலங்களைப் பறித்து இங்கிருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

யுத்தத்திலே இனப்படுகொலையை செய்தார்கள் என சர்வதேச ரீதியில் எதிர்கொள்கின்றனர். இந்த நேரத்தில் வடக்கு கிழக்கிலுள்ள சைவசமய அடையாளங்களை பௌத்த அடையாளங்களாக நிலைநிறுத்தி சிங்கள பௌத்த நாடு என நிரூபிக்க நினைக்கின்றனர்.

அந்த முயற்சியினுடைய ஒரு கட்டமாக பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தை சங்கமித்த காலத்தில் நடப்பட்டதாகப் புனைந்து செய்தியைப் பரப்புகின்றனர். அதற்கெதிரான போராட்டமாகவே இது இடம்பெறுகின்றது.

விஜயன் இலங்கைக்கு வர முன்னரே இலங்கையில் பஞ்ச ஈச்சரங்கள் காணப்பட்டது. வரலாற்று வழியாக சிவனை வழிபடும் நாடாக இருந்ததால் தான் திருமூலர் சிவபூமி என இந்த நாட்டை வர்ணித்துள்ளார்.

உண்மையைச்சொன்ன வரலாற்றாசிரியர்களை புறக்கணித்து பொய்களைப் புனைந்து பொய்களுக்கூடாக இந் நாட்டிலுள்ள தமிழ் மக்களை பூர்வீகக் குடிகள் இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர்.

இந்த ஆலயத்தில் 1768 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உறுதியில் எந்தவிதமான அரசமரமும் இருந்ததாக இல்லை. இதை சர்வதேச சமூகத்திடம் கொண்டு செல்வதற்கும் இது தொடர்பான போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முழு முயற்சிகளை மேற்கொள்வோம். எனத் தெரிவித்தார். (4)

### வவு.இரட்டைக்கொலை

## பிரதான குற்றவாளிக்கு 11 வரை விளக்கமறியல்

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் தம்பதிகள் மரணமடைந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை எதிர் வரும் 11 திகதி வரை அநுராத புரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வவுனியா சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்திய பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் குற்ற புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் ஆஜர் படுத்தினர்.

இதன்போதே, சந்தேக நபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அனுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்து வைக்க வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் அஹமட் ரசீம் உத்தர விட்டார். (4)

## ஆடையில் தீ பரவியதால் பரிதாபமாக உயிரிழந்த பெண்

(கொழும்பு)

பொல்பிதிகம நாகொல்லை பிரதேசத்தில் பெண் ஒருவர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

வீடு தீப்பற்றி எரிந்த போது அருகில் இருந்த குப்பைகளும் தீப்பிடித்து எரிந்ததையடுத்து, தீயை அணைக்க முற்பட்ட போதே அவரது ஆடையில் தீப்பிடித்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கலபிடமட, பொல்பிதிகம பிரதேசத்தை சேர்ந்த 70 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 |
| தக்காளி | 280 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 220 | 300 |
| கோவா | 220 | 300 | 300 |
| கரட் | 520 | 520 | 600 |
| பூசணி | 120 | 120 | 150 |
| புடோல் | 70 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 200 | 400 |
| வெண்டக்காய் | 80 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 120 | 120 | 160 |
| லீக்ஸ் | 200 | 240 | 300 |
| பீற்றூட் | 180 | 180 | 200 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 360 | 300 |
| போஞ்சி | 450 | 500 | 550 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 20 | 60 |
| ஈரப்பலா | 150 | 80 | 80 |

## மன்னாரில் மீட்கப்பட்ட சடலத்தை இனங்காண மக்களின் உதவி கோரல்

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு சற்று தொலைவில் உள்ள கடற்கரை பகுதியில் கடந்த 2 ஆம் திகதி மாலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண மன்னார் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

மீட்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் சுமார் 30 தொடக்கம் 50 வயது மதிக்கத்தக்க 4.8 அடி உயரம் கொண்டது எனவும், சடலத்தில் கருப்பு நிற நீளக் கை சேட், கருப்பு நிற அரைக்காற் சட்டை மட்டும் நீல நிற பெட்டி சாரம் அணிந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர் அணிந்துள்ள கருப்பு நிற அரைக் காற்சட்டையில் SRI LANKA CRICKET என எழுதப்பட்டுள்ளது.

எனவே குறித்த சடலம் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் அல்லது அடையாளம் காண விரும்புபவர்கள் மன்னார் பொலிஸ் நிலையம் அல்லது மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையுடன் தொடர்பை ஏற்படுத்துமாறு மன்னார் பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-285)

## பெருமெடுப்பில் ஐ.தே.க மாநாடு வஜிர தலைமையில் குழு நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 77 ஆவது சம்மேளனம் செப்டெம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இதற்கான நிகழ்வுகளைப் பிரமாண்டமாக நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காகக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தலைமையில் 14 பேர் அடங்கிய முகாமைத்துவ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, உப தலைவர் அகில விராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, செயற்குழு உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் இந்தக் குழுவில் இடம் பிடித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழா மற்றும் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்தக் குழு முன்னெடுக்கும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலையில்...

ளது.

நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த திலீபன் ஈழப்பிரியா என்கிற குடும்ப பெண்ணே உயிரிழந்தவராவார்.

காங்கேசன்துறையில் இருந்து கல்கிசை நோக்கி சென்ற புகையிரதத்தில் மோதுண்டே குறித்த உயிரிழப்பு இடம் பெற்றது.

குறித்த பெண் புகையிரதத்தின் முன்பாக பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7,33,104)

## மின்கட்டணத்தை...

என்று இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

06 மாதத்துக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் வருடத்துக்கு இரு முறை மின் கட்டணம் திருத்தப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மின் கட்டணத்தை திருத்துவதற்கான யோசனை மின்சார சபையினால முன்வைக்கப்பட்டுள்ளதாக மின் பாவனையாளர்களின் சங்கம் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த வருடத்தில் மீண்டும் மின் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள முடியாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## அக்கராயனில்...

நொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் வேலு செல்வகுமார் (வயது - 40) என்பவரே படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கப்ரக வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## சங்கானையில்...

சுழிபுரம் - பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் சங்க மித்தையால் கொண்டு வந்து நாட்டப்பட்டது என சித்தரித்து வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்னால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் பாதாதைகளை ஏந்தியவாறு "சங்கமித்தை வரவுமில்லை அரச மரம் நடவுமில்லை, பொய்யான வர்த்தமானியை இரத்துச் செய், இந்த மண் எங்களின் சொந்த மண், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், பறாளாய் முருகன் தமிழர் சொத்து, தாயகத்தில் ஆக்கிரமிப்பு சர்வகட்சி கூட்டத்தில் நல்லிணக்க நாடகம், இராணுவமே வெளியேறு" என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33,104)

## கடுமையான...

துள்ளது.

27,885 குடும்பங்களைச் சேர்ந்த 89,485 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் 21,714 குடும்பங்களைச் சேர்ந்த 69,113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சப்ரகமுவ மாகாணத்தில் 1,098 குடும்பங்களைச் சேர்ந்த 5,734 பேரும் வடமேல் மாகாணத்தில் 1,726 குடும்பங்களைச் சேர்ந்த 5,655 பேரும் கிழக்கு மாகாணத்தில் 2,747 குடும் பங்களைச் சேர்ந்த 8,983 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ம-7)

## விவசாயி...

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, மற்றொரு ரக உரத்தின் விலையை குறைக்கவும், உர விநியோகத்தில் இருந்து அரசாங்கம் விலகி, உரத்தினை கொள்வனவு செய்வதற்கு தேவையான பணத்தை விவசாயிகளின் வங்கி கணக்கில் வைப்பிலிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது 1.2 மில்லியன் நெல் விவசாயிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மண்டைதீவில்...

நிபுணர்கள் பலரும் பங்குபற்றவுள்ளனர்.

மண்டைதீவு நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இலண்டனில் வதியும் மருத்துவ நிபுணர் செல்வலிங்கம் தெய்வக்குமார் அவர்களின் வழிப்படுத்தலில் நடைபெறும் இம் மருத்துவ முகாமில் பொதுமருத்துவம், இதய மருத்துவ பரிசோதனை, கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கல் உள்ளிட்ட பல்வேறுமருத்துவ பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன. (ம)

## ஜனாதிபதியிடம்...

தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிலையில் மாகாண சபை முறைமை மற்றும் பெருந்தோட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 'சங்க...

பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அரச மரமானது சங்கமித்தையால் நாட்டப்பட்டதாக கூறி அது தொல்லியல் சின்னம்என வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றினை நடத்துவதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை சுழிபுரம் சந்தியில் போராட்டமானது ஆரம்பமானது. பின்னர் போராட்டம் பேரணியாக பறாளாய் முருகன் ஆலயம் வரை சென்று நிறைவுற்றது.

போராட்டத்தின்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு, "சங்கமித்தை வரவும் இல்லை, அரச மரம் நடவும் இல்லை" "இந்த மண் எங்களின் சொந்த மண்", "மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா", "இனப்படுகொலை இராணுவமே வெளியேறு", தொல்லியல் திணைக்களமே வெளியேறு, பறாளாய் எங்கள் சொத்து, குருந்தூர் மலை எங்கள் சொத்து, கீரிமலை எங்கள் சொத்து, மயிலத்த மடு எங்கள் சொத்து, வெடுக்கு நாறிமலை எங்கள் சொத்து" என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,33,104)

ஆடுகள் விற்பனைக்கு
தொடர்பு
077 978 9375
(16630)

மெகா பவர்
திகதி 05/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1545
O 20 13 47 53 73
73302

தன நிதானய
திகதி -2023.08.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1227
L 21 33 65 75 L
45620

Lucky 7
திகதி 05.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 023
L7 இலக்கம் 1 3
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
தனுசு 3 3 4 6 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3439
சீட்டிழுப்பு திகதி 05.08.2023
K 10 39 43 77
K 16275

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.05
சீட்டிழுப்பு இலக்கம் 506
சிம்மம் 18 23 41 53 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/05
சீட்டிழுப்பு இலக்கம் 5197
B 0 9 9 4 1 1

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2171 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.05 தினம் சனிக்கிழமை
04 22 56 57 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,291,740.40
14 34 50 68 C

சனிதா
திகதி 2023.08.05 வெற்றி வாரம் 4332
27 41 46 73 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,303,768.00
03 07 35 43 I

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3883 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.05 தினம் சனிக்கிழமை
02 32 33 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,618,548/-
03 23 58 61

கப்ருக
திகதி 05.08.2023 வெற்றி வாரம் 1347 வர்ணம் சிவப்பு
H 31 34 38 44 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.424,774,044.20
02 18 37 53 S
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 617 திகதி 2023-08-05 வர்ணம் ஆரஞ்சு நிறம்
V 13 26 34 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 22,623,096.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,563,832/-
57 58 59 72 P
08 13 40 71 X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சைவ போசனமுடைய 45 வயதுடைய சதய நட்சத்திரமுடைய விவசாயம் பார்க்கும் மணமகனுக்கு சைவ போசன முடைய மணமகள் தேவை.
**விவாகரத்தானவர் சீதனம் எதிர்பார்க்கவில்லை.**

தொடர்பு
**077 908 4823**

(16579)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
துறைமுகத்தில் இருந்து 1.2 Km தூரத்தில்

தொடர்பு
**075 521 3533**

(16412)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
**IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH** *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**

(16505)

## A/L Online Classes

Tamil/English Medium
**Biology, Chemistry**
Conducted by Lecturer
**077 807 5566**

(16649)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=
**T.P:077 544 8503**

(16349)

## வேலைவாய்ப்புகள்

**dewmasweb.com**
இணையத் தளத்தில் யாழ். மற்றும் வெளி மாவட்ட வேலைவாய்ப்புக்களை பார்வையிடலாம்.

(16611)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg சீனி | - 235/= (max2Kg) |
| 1 Kg றவை | - 288/= |
| 1 Kg கோதுமை மா | - 189/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 199/= |
| 1 Kg அரிசி மா | - 169/= |
| 1 Kg நீட்டல் பச்சை | - 148/= |
| 1 Kg மல்லி No.1 | - 399/= |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1820/= |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= ~~(1080/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |
| 1 Kg Sunlight rose powder | - 390/= ~~(480/=)~~ |

1050/-




~~1080/-~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

**Happy Supermarket**
**0777 8080 30**

(16632)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டுடன் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை றோட் புத்தூர் சந்தியில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரம்
- குடியிருப்பு சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

(16621)

**076 788 0591**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- புதிய செம்மணி வீதி
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்

(16621)

**076 788 0591**

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

# தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி (BSc in IT)

**2023/24**

### நுழைவுத் தகைமைகள்

1. இலங்கையின் G.C.E. (A/L) பரீட்சையில் எத்தனை அமர்வுகளாயினும் குறைந்தது மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல், அல்லது
2. திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சமூக விஞ்ஞானத்தில் அடிப்படைக் கற்கைநெறிச் சான்றிதழ் / சமூக விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழ், அல்லது
3. திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் விஞ்ஞானத்தில் அடிப்படைக் கற்கைநெறியில் / விஞ்ஞானத்தில் உயர் சான்றிதழ் கற்கையில் குறைந்தது ஏதாவது மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல், அல்லது
4. மேலுள்ள 1 மற்றும் 3 பகுதிகளை ஒருங்கிணைத்து குறைந்தது மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல், அல்லது
5. மூதவையினால் (Senate) ஏற்றுக்கொள்ளத்தக்க உயர் அல்லது சமனான கல்வித் தகைமைகள்.
   அத்துடன்
6. தெரிவுப் பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வில் சித்தியடைதல் வேண்டும்.

* தெரிவுப் பரீட்சை எதிர்வரும் புரட்டாதி மாதம் 3ᵗʰ திகதி 2023 காலை 10.00 a.m. – 11.00 a.m. வரை OUSL இன் பிராந்திய நிலையங்களில் நடைபெறும்

- ACM/IEEE இன் வழிகாட்டலுக்கமைய திட்டமிடப்பட்டுள்ளது.
- தொழில் முறைக் கல்வித் திட்டம்.
- SLASSCOM அங்கத்துவ நிறுவனத்தினூடாக உள்ளகப்பயிற்சி மற்றும் புலமைப்பரிசில் சந்தர்ப்பங்கள்.
- பணிபுரிவோர் உட்பட அனைவருக்கும் வாய்ப்பு.
- ஆய்வுகூட அமர்வு உட்பட நிகழ்நிலை மற்றும் நேரடிக் கற்கை.
- மூன்றாம் வருடத்தில் BSc (Hons) பட்டத்திற்கு மாற்றுவதற்கான சந்தர்ப்பம்.

### விண்ணப்ப விபரம்

- விண்ணப்பக் கட்டணம் : **Rs. 750/-**
- விண்ணப்ப விநியோகத் திகதி : **16th July 2023**
- விண்ணப்ப முடிவுத் திகதி : **15th August 2023**
- கற்கைநெறிக் காலம் : **BSc in IT (3 Years) / BSc (Hons) in IT (4 Years)**
- இணையத்தளத்தினூடாக விண்ணப்பிக்கவும் : **https://reginfo.ou.ac.lk/applyonline**
- விண்ணப்பப்படிவக் கட்டணம் ஆனது வரவட்டை / கடனட்டையைப் பயன்படுத்தி இணையத்தினூடாக செலுத்தப்படுதல் வேண்டும். திறந்த பல்கலைகழகத்தின் பிராந்திய நிலையங்களில் மற்றும் ஏனைய கற்கை நிலையங்களில் நேரடியாகத் தங்களது கட்டணத்தைச் செலுத்த முடியும்.

**Apply Online only**

**Open Days and Orientations**

- Open day 2 - 26th July 2023 (onsite Colombo RC)
- Open Day 3 - 29th July 2023, 9.30 a.m. (onsite Kandy RC & Matara RC)
- Open day 4 - 5th August 2023, 9.30 a.m. (onsite Jaffna RC, Batticaloa RC, Kurunegala RC)

**For More Details**

Department of Computer Science
Faculty of Natural Sciences

Registrar - The Open University of Sri Lanka, Nawala, Nugegoda.

011 288 1226 / 011 288 1095 / 011 288 1000/ 070 699 3134
https://ou.ac.lk/nsc/programme/bscit/
dcsitdegree@ou.ac.lk

SLASSCOM

(C-2092)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, [illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org